NALLUR BRANCH
MUNICIPAL COUNCIL
JAFFNA.

விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆடி 31 ஜுலகம் 9 இதழ் 187
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 16-8-1986

இலங்கை கலாசாரத்தில்—

## பௌத்தம் ஆதிக்கம் செலுத்தியது என்ற வாதம் பொய்யானது

### — பேராசிரியர் சிறிகுணசிங்க

கொழும்பு, வெள்ளி.

''இலங்கையின் கலாசாரம் சிங்களவர் மட்டுமன்றித் தமிழர், முஸ்லிம்களினது பங்களிப்பும் சேர்ந்த ஒரு கலவையாகும்'' என்று கனடா விக்டோரியாப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைப் பேராசிரியரான சிறி குணசிங்க தெரிவித்துள்ளார்.

''எமது கலாசாரம் வளர்கின்றதா? அல்லது தாழ்வுறுகின்றதா?'' என்ற தலைப்பில் சண்டி தர்மராஜயம் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றுகையிலேயே இதனை அவர் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், ''இலங்கையின் கலாசாரத்தில் பௌத்த சமயம் ஆதிக்கம் செலுத்தியது என்ற வாதம் பொய்யானது. ஏனெனில், பௌத்த சமயத்தின் நோக்கம் ஒரு மனிதனின் ஆத்மீக வளர்ச்சியே அன்றி உலகாயுத விஷயங்களிலல்ல. அதனால்தான் பௌத்த சமயத்தினால் தனிக் கலாசாரத்தையும் வளர்க்க முடியவில்லை'' என்றார்.

எமது கலாசாரம் மாற்றத்திற்குள்ளாகிறது என்ற சிலரின் அச்சம்பற்றி பேராசிரியர் குறிப்பிடுகையில், ''சகல பொருட்களும் மாற்றத்திற்குள்ளாக வேண்டியவையாதலால் இதுபற்றிக் கவலைப்பட அவசியமில்லை'' என விளக்கமளித்தார். (ஊ)

● சாம்பல்தீவில்—

# நான்கு மணி நேர சமரில் படையினர் இருவர் பலி

(மூதூர் நிருபர்)

திருமலை மாவட்டத்தில் ஆயுதப்படையினருக்கும் போராளிகளுக்குமிடையில் மோதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இரண்டாவது நாளாக நேற்று சாம்பல்தீவில் நடைபெற்ற மோதலில் இரு இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்; பலர் படுகாயமுற்றனர்.

கவசவாகனங்களிலும் நடைபவனியாகவும்ரோந்து சென்ற இராணுவத்தினர்மீது போராளிகள் புதுவித தாக்குதல்களை நடத்தினர்கள். இத்தாக்குதல்களில், இராணுவத்தை சேர்ந்த பி ஏ. டி. மஹிந்த ரத்ன [28 வயது], பி ஆர். தயாரத்ன [28 வயது] ஆகிய இருவரும் ஸ்தலத்திலே கொல்லப்பட்டார்கள் எனத் தெரிய வந்துள்ளது.

நேற்றுப பிற்பகல் 2மணி தொடக்கம் 6 மணிவரை இந்த நேரடிச்சமர் நீடித்தது.

கொல்லப்பட்ட இராணுவத்தினரின் சடலங்களை மீட்பதற்கு ஹெலிகொப்டர் ஒன்று ஸ்தலத்திலே இறங்குவதற்கு படையினர் எடுத்த முயற்சி போராளிகளினால் முறியடிக்கப்பட்டது. பின்னர் போராளிகள் அவ்விடத்தை விட்டு தலைமறைவானதும் பிற்பகல் 6 மணியளவில் கவச வாகனம் ஒன்றில் வந்த இராணுவத்தினர் சடலங்களையும் படுகாயமடைந்தவர்களையும் எடுத்துச்சென்றனர். [இ]

## விடுதலைப் புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், சனி

''திருமலை நகரிலிருந்து நேற்றுப்பிற்பகல் 100க்கும் மேற்பட்ட ராணுவத்தினர் 3 கவசவாகனங்களிலும் ஒரு ஸ்கவுட் காரிலுமாக மொத்தம் 5 வாகனங்களிலும் நடைபவனியாகவும் சாம்பல் தீவு நோக்கி தேடுதல் வேட்டையாட வந்து கொண்டிருந்த போது பிற்பகல் 2 மணியளவில் சாம்பல் தீவு பெரியபாலத்துக்கு அண்மையாக வைத்து விடுதலைப்புலிகள் ''கனெனன் சார்ஜ்'' இனை வெடிக்கச்செய்தனர் நடைபவனியாக வந்த இராணுவத்தினரில் 5 பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர் மற்றும் பலர் படுகாயங்களுக்கு உள்ளானார்கள்.

இதேவேளை விடுதலைப்புலிகள் இராணுவத்தினருடன் நேரடி மோதலிலும் இறங்கினர். இதன்போது ஹெலிகொப்டர் ஒன்றும் இவர்களுக்கு உதவியாக தாக்குதலில ஈடுபட்டது. எனினும் விடுத

[4ம் பக்கம் பார்க்க]

## படையினர் உஷார் நிலையில்

வவனியா, வெள்ளி

கொழும்பில் இனப்பிரச்னை சம்பந்தமாக பேசசுவார்த்தை நடைபெறுவதால் வவனியாவில் அசம்பாவித சம்பவங்கள் நிகழலாம் எனக்கருதி ஆயுதப் படையினர் உஷார்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது- (மா)

## இயக்கத்தினரால் தேடப்பட்டநபர் படையினரால் கைது

மட்டக்களப்பு, வெள்ளி

விடுதலை இயக்கமொன்றினால் தேடப்பட்டு வந்த மற்றொரு விடுதலை இயக்கத்தின் முக்கியஸ்தர் ஒருவர், ரோந்து சென்று கொண்டிருந்த அதிரடிப்படையினால் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

[4ம் பக்கம் பார்க்க]

கூட்டணி — அரசு

## $2\frac{1}{2}$ மணிநேர பேச்சு

கொழும்பு நிருபர்

தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கும் அரச குழுவினருக்கும் இடையே நேற்று இரண்டரை மணிநேரம் பேச்சுக்கள் நடைபெற்றன.

அரச குழுவின் சார்பில் ஜனாதிபதி தலைமையில் ஏழு உறுப்பினர்களும், கூட்டணியின் சார்பில் செயலாளர் நாயகம் திரு அ அமிர்தலிங்கம் தலைமையில் ஏழு உறுப்பினர்களும் பங்கு பற்றினார்கள்.

இப் பேச்சுக்களின் விபரம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

ஜே. வி. பி. கூட்டத்தில் பங்குபற்றிய

## ஐந்து மாணவிகள் உட்பட 13 பேர் கைது!

கொழும்பு, வெள்ளி

அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் தடை செய்யப்பட்ட ஜே. வி. பி. கட்சியைச் சேர்ந்த பதின்மூன்றுபேரை காலி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

காலிப்பகுதியிலுள்ள கல்லூரி ஒன்றில் பயிலும் ஐந்து மாணவிகளும், ஒரு பெண்ணும் மற்றும் ஜே வி. பி. கூட்டங்களில் பங்கு கொண்ட ஏழு இளைஞர்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களாவர்.

அண்மையில் இடம்பெற்ற தாதிமார் வேலைநிறுத்தம், வைத்தியர்களின் வேலைநிறுத்தம், மொனருகலையில் சீனித்

(4ம் பக்கம் பார்க்க)

## விரிவுரைகளுக்கு சமூகமளிக்குமாறு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், சனி

யாழ் பல்கலைக்கழக மாணவர்களை இன்று நடைபெறவிருக்கும் விரிவுரைகளுக்குச் சமுகமளிக்கும்படி யாழ் பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

(4ம் பக்கம் பார்க்க)

செம்பியன்பற்று கடலில்—

# படகின்மீது 'ஹெலி தாக்குதல் மூவர் கருகி மாண்டனர்

யாழ்ப்பாணம், சனி

செம்பியன்பற்று கடல் பிராந்தியபகுதியில் தனியார் விசைப்படகு ஒன்றின் மீது ஹெலிகொப்டரிலிருந்து துப்பாக்கிப்பிரயோகமும் குண்டு வீச்சும் மேற்கொள்ளப்பட்டதால் அப்படகு முற்றாக எரிந்ததுடன் அதிலிருந்த மூவரும் கருகி மாண்டனர்.

நேற்றுபிற்பகல் இம்பரிதாப சம்பவம் நிகழ்ந்தது.

செம்பியன்பற்று கடற்பகுதியில் தனியார் படகொன்று சென்று கொண்டிருந்தபோது படகை நோக்கி கடற்படையினர் பீரங்கித்தாக்குதல்நடாத்தினர். இதனைத் தொடர்ந்து அத்தனியார் விசைப் படகு கடற்கரையை நோக்கி வேகமாகச் சென்றது கரையை நோக்கிச் சென்ற அப்படகு அதிவேகத்தால் கடற்கரையில் மணல் மேட்டின்மேல் புதைந்துவிட்டது. அச்சமயம் அடபகுதியில் பறந்துகொண்டிருந்த ஹெலிகொப்டர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன் குண்டுகளையும் வீசியது.

[4-ம் பக்கம் பார்க்க

தமிழ் அகதிகளை

## கடலில் தத்தளிக்கவிட்ட கப்பல் கண்டுபிடிக்கப்பட்டது

பேர்லின், ஆக-15

இலங்கைத் தமிழ் அகதிகள் 152 பேரைக் கடலில் தத்தளிக்கவிட்டுச் சென்ற கப்பலைக் கண்டுபிடித்துள்ளதாக மேற்கு ஜெர்மன் பொலிசார் அறிவித்துள்ளனர்.

இந்தக் கப்பல் மேற்கு ஜெர்மனியில் பதிவுசெய்யப்பட்ட சரக்குக் கப்பல் எனக் கருதப்படுகின்றது.

மேற்படி கப்பல் நியூபவுண்லாந்து கடற்கரைக்கு அப்பால் அகதிகளை இரு வள்ளங்களில் இறக்கிவிட்டுச் சென்றதாகக் கனடாப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கப்பல் கடந்த மாதம் 28ம் திகதி அதிகாலை ஒரு துறைமுகத்திலிருந்து முறைப்படி அறிவிக்காமற் புறப்பட்டுச் சென்றதாக நம்பப்படுகின்றது. (எ)

எயர்லங்கா விமானம்—

## ஈராக் ஆகாய பிராந்தியத்தில் அத்துமீறி ஊடுருவியது

[லண்டன், ஆசு 15]

இலங்கை எயர்லங்கா விமானமொன்று நேற்றிரவு ஈராக்கின் ஆகாயப் பிராந்தியத்தினுள் அத்துமீறி ஊடுருவியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனியிலுள்ள பிராங்பேர்ட் நகரிலிருந்து குவைத்துக்கு பிரயாணிகளை ஏற்றிச் சென்ற விமானமே இவ்வாறு ஈராக்கின் ஆகாயப்பிராந்தியத்தினுள் ஊடுருவியததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தை விசாரணை செய்ய ஜனாதிபதி ஜயவர்த்தனவினால் உத்தரவு பிறப்பிக்கப்படடுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது. [ஊ]

## அரசு அறிக்கை

கொழும்பு, வெள்ளி

யாழ்ப்பாணம் கோட்டையைச் சுற்றியுள்ள தடை செய்யப்பட்ட பகுதியினுள் கடந்த புதன்கிழமை மாலை இரண்டு தீவிரவாதிகள் சென்று நீகல் திரைப் படமாளிகைக்குச் சமீபமாக சக்தி வாய்ந்த மின் விளக்கொன்றை இராணுவ முகாம் பக்கம் நோக்கி அமைக்க முற்பட்ட போது இராணுவத்தினரால் மேற்கொண்ட

[4ம் பக்கம் பார்க்க]

## ஜனாதிபதியின் பயணம் ரத்து

கொழும்பு, வெள்ளி

ஷிம்பாபே நாட்டில் நடைபெறவிருக்கும் எட்டாவது அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தன கலந்து கொள்ள மாட்டார் என்று அறியப்படுகிறது.

இனப்பிரச்னை தொடர்பாக அரசின் நடவடிக்கைகளில் இறுதிமுடிவு காணும்வரையிலேயே தமது பயணம் ரத்துச் செய்யப்பட்டதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்குப் பதிலாக மேற்படி மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரதமர் திரு ஆர். பிரேமதாசா அடுத்த வாரம் புறப்படவுள்ளார். [எ-இ]

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய குளிர்சாதனப் பெட்டி (Genaral Japan) ஒன்று விற்பனைக்குண்டு 32, சீனிவாசகம் வீதி, கொட்டடி. யாழ்ப்பாணம். [C-4062]

பலாலிவீதி. கோண்டாவில் சந்திக்கண்மையில் சகல வசதிகளுடன் கூடிய வீடுவளவு 3½ பரப்பு உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு வீ. த. பாலசிங்கம், பலாலி வீதி, கோண்டாவில். (C-4060)

2½ பரப்பு காணியுடன் எல்லா வசதியும் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும் நா. முருகேசு, ''இலக்குமி வாசா'' சூளாவடி லேன், ஆனைக்கோட்டை. (C 4068)

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் - குருமஹா சந்நிதானம், ஆதிமுதல்வர் - அவர்கள் நிகழ்த்திய (I) உபந்நியாசங்கள் (II) அருளுரைகள் ஆகியவை ஒலிப்பதிவு செய்யப்பட்ட கசெற்றுகளில் இப்பொழுது, விற்பனைக்குண்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், (C 4081)

வீட்டுத்தளபாடங்கள் கட்டில், மெத்தைகள், கசற்றேடியோ, Baby Cot, Show Case, கண்ணாடி மேசைகள். Formica சாப்பாட்டு மேசை கதிரைகள், கிளாஸ், பித்தளை, சில்வர் பைரக்ஸ், Pyrex வகைகள், T. V. Stand, Form Rubber மெத்தைகள் சிங்கர் Zig Zag தையல் மெசின், ஹோல் செற், மற்றும் பல உடன் விற்பனைக்கு M தியாகராஜன், 326 பிரதான வீதி, யாழ்ப்பாணம். (மாவடிச் சந்தியருகில்) C 4067)

வெளிநாடு செல்பவர்களின் புத்தம் புதிய Kenwood, Cake Mixer, Fan, Iron, Typewriters, Dinner Sets குளிர்சாதனப்பெட்டி மற்றும் பல பொருட்கள் தளபாடங்கள் மலிவு விலையில் பெற ஓர் அரிய வாய்ப்பு உடன் தொடர்பு கொள்க; Mack, 8, 1st Lane, PointPedro Road, Jaffna Tel 24791, 24836. அத்துடன் நல்ல சுற்றுடலில் கொழும்புத் துறையில் 3 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. (C 4082)

சாதாரண/மின்சார சிங்கர் தையல் மெசின், Hitachi குளிர்சாதனப்பெட்டி. Hi - Fi Three in one கசற்றேடியோக்கள், சுவர்மணிககூடுகள், Blender, Gas and Electric Cooker, Gas Cooker, Cylinder, தேக்கு அலுமாரி, Record Player, Projector, Deep - frizer, Hall Set, மற்றும் பலபொருட்கள் விற்பனைக்குண்டு சி.பத்மநாதன் திருநெல்வேலி வடக்கு, [திருநெல்வேலி சந்திக்கும் மருத்துவக் கல்லூரிக்கும் இடையில்) [C-4086)

### சேவை

ரான்ஸ்போமர், மோட்டர், மின் விசிறி, மின் அடுப்பு, கிறையிண்டர், வாசிங்மெசின், ஸ்ராட்டர், நிப்சுவிச் ஆகியன திருத்த, றீவயிண்டிங் செய்ய, வயறிங் வேலைகள் செய்ய: Omega, Manipay Road, Jaffna. (ஈழநாட்டிற்கு எதிரில்) பழுதடைந்த, உபயோகிக்கமுடியாத மேற்கூறிய உபகரணங்களும் விலைக்கு வாங்கப் படும். [C-4010]

### WANTED

An Engineer with technical knowledge 30 years experience in Government Institution seeks suitable employment under a kind master Apply: Box No A 1145 C/o Eelanadu Ltd, Jaffna. A 1145

### வகுப்புகள்

வெளிநாடு செல்பவர்களுக்கு குறுகிய காலத்தில் Technical சான்றிதழ் பெறுவதற்கு வாய்ப்பு:- Electronic Engineering, Radio and T. V (Antenna, Deck), Electrical wiring, வெல்டிங், மோட்டர் வையின்டிங், மோட்டார்மெக்கானிசம், Typing [English], புதிய பிரிவுகள் 16-08-86 இல் ஆரம்பமாகின்றன. Vispa Engineering Aid Hall, (ஆனைப் பந்திச் சந்திக்கருகாமையில்) 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C-4046)

உருத்திரவீணை - வாய்ப்பாட்டு ஆரம்பத்தில் இருந்து பழக விரும்பும் மாணவ/மாணவிகள் உடன் தொடர்பு கொள்ளவும் திருமதி துஷ்யந்தி நரேந்திரன் ''ஹரி வாசம்'', தாவடி றோட், மானிப்பாய். C 4083

### தேவை

எமது தொழிற்சாலையில் பப்படம் தயாரிக்கத் தெரிந்த ஆண்கள் உடன் தேவை. சீ. கே. எஸ். அம்பாள் இன்டஸ்றீஸ், மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி என்ற விலாசத்தில் நேரில தொடர்புகொள்ளவும். தகுந்த சம்பளமும் சலுகைகளும் வழங்கப்படும். [C-4024]

பெருந்தொகையான நெல் லிங்கன் தேவை. விலை விபரங்களுடன் மாதிரியுடனும் நேரில் தொடர்பு கொள்ளுங்கள்' பணிப்பாளர்: அருள் ஆச்சிரமம், இல. 5, கோவில் வீதி (Temple Road), யாழ்நகர். தொலைபேசி: 24081 (A 1144)

### மணப்பந்தல்

Paris நகரில் மாதம் 500 பவுண் சம்பளம் பெறும் யாழ் வேளாள மகனுக்குத் 'தகுதியான 30 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. U. K போன்ற வெளிநாடுகளில் தற்சமயம் வசிப்பவர்களும் விரும்பத்தக்கது. விபரம், குறிப்புடன் தொடர்பு கொள்ளவும் விளம்பர இல. C 4070 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். C 4070

## பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க் ★ கனடா

நேரடிப் பிரயாணம் உடனுக்குடன் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

★ சவூதி ★ குவைற்

ஆகிய இடங்களில் வருமான வாய்ப்புகளுக்கான ஒழுங்குகள் உடன் செய்து கொடுக்கப்படும்.

Passport, Bond

முதலியனவும் செய்துகொடுக்கப்படும்:

கொழும்பில் எமது முகவரி:

V. M. BALASINGAM,
HOTEL ORCHID INN,
571/6, GALLE ROAD,
WELLAWATTE, COLOMBO-6;
T. P. 583916

GROUP ATLANTIC

163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(அடைக்கலமாதா கோவிலுக்கு முன்பாக)
A 1035

★ கனடா
★ டென்மார்க்
★ ஜேர்மனி

★ கனடா செல்ல விரும்புவோர்க்கு ஓர் அரிய சந்தர்ப்பம். எமது முகவர் உங்களை கனடா வரை நேரடியாக அழைததுச் செல்வார்.

★ மீண்டும் நாம் டென்மார்க் பயணம் ஆரம்பித்துள்ளோம். எமது முகவர் தங்களை டென்மார்க் அழைத்துச் செல்வார். வாரா வாரம் எமது பிரயாண ஒழுங்குகள் நடைபெறும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

★ ஜேர்மன் நாட்டிற்கு செல்ல விரும்புவோருக்கும் பிரயாண ஒழுங்கு செய்து தரப்படும்.

உடன் தொடர்புகொள்ளவும்.

பாஸ்போர்ட், பொன்ட் ஆகியனவும் செய்துதரப்படும்.

தொடர்பு:-

N. BALA

பஸ் வழி இல.
764 பலாலி வீதி,
கோண்டாவில்.

திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(C-4076)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



**அமரர் முருகுப்பிள்ளை வரத்துங்கன்**

அன்னை மடியில்: 13-01-1913
அமலன் அடியில்: 13-07-1986

எங்களை வாழவைத்த தெய்வமே வரையாது வழங்கும் வள்ளலே, எம்மைவிட்டு எங்கு சென்றாயே ? தேம்பித் தேம்பி அழுகின்றோம் உங்கள் தெய்வீக உருவம் தென்படவில்லையே, வெம்பி வெம்பி வேகுகிறோம் உங்கள் வெளித் தோற்றம் வெளிப்படவில்லையே எங்கள்மேல் கருணைகாட்டி, கனவிலே தானும் காட்சி தாராயோ? எம் மனக் கண்முன் நீங்கா நிழலும் நிறைந்த அன்புருவமும், நீங்களே தான் தங்கள் ஆத்ம சாந்திக்காக நாங்கள் இறைஞ்ச வேண்டியதே இல்லை. தங்கள் நற்பண்புகளும் அன்பும் ஆதரவும் இனிய சொற்களும், இல்லை என்று சொல்லாது ஈயும் வள்ளல் தன்மையுமே வேண்டிநிற்கும்.

மூன்று நாட்களும் இரவு பகலென நோக்காது இவரது மரணச்சடங்கில் அயராது நின்று உதவி செய்த உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள், சபையார் அனைவருக்கும், அவ்வேளையில், எமது அன்புருவம்பற்றி இரங்கல் உரை நிகழ்த்திய அன்பர்களுக்கும், தேவாரம் ஓதிய நண்பர்களுக்கும், மலர்வளையம், சாத்தியோருக்கும், மலர் மாலைகள் அணிவித்தோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், சமூகமளித்து எம்மை ஆறுதல் படுத்தியோருக்கும் என் மனமார்ந்த நன்றி

பிரிவால் வாடும் மனைவி, மகன், துயரில் துடிக்கும் U. K, மருமகன், சகோதரிகள், சகோதரர்கள், மருமக்கள், பெறுமக்கள்.

'பரம'
உடுப்பிட்டி. C 4084

## 'சென்றலைட்ஸ்' சாம்பியன்

யாழ்ப்பாணம், சனி 'சென்றலைட்ஸ்' கழகத்தின் 5-வது ஆண்டு விழாவை முன்னிட்டு, யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப்பட்ட மென்பந்துப் போட்டியில் 'சென்றலைட்ஸ்' கழகமே சாம்பியன் கேடயத்தைதட்டிகொண்டது.

'சென்றலைட்ஸ்' கழகத்துக்கும், மல்லாகம் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில், கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற சாம்பியன் மோதலில் சென்றலைட்ஸ் கழகம் 92 அதிகப்படியான ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

சென்றலைட்ஸ் கழகம் முதல் இன்னிங்ஸில் 37 ஓட்டங்களையும், 2-வது இன்னிங்ஸில் 105 ஓட்டங்களையும பெறறது. மல்லாகம் விளையாட்டுக் கழகம் முதல் இன்னிங்ஸில் 17 ஓட்டங்களையும், 2-வது இன்னிங்ஸில் 33 ஓட்டங்களையும் பெற்றது.

சென்றலைட்ஸ் கழக வீரர் கே. தோமஸ் சிறப்பாகப் பந்துவீசி 19 ஓட்டங்களைக் கொடுத்து 9 விக்கெட்டுகளை வீழ்த்தினர். [வி]

## அந்தியேட்டி அழைப்பு



**திரு. ப. சாமிநாதன் (படப்பிடிப்பாளர்)**

தோற்றம்: 16-05-1937
மறைவு: 06-08-1986

இன்று 16-8-86 சனிக்கிழமை அந்தியேட்டி கிரியை நடைபெறுவதால் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் கலந்து கொள்ளும்படி வேண்டிக் கொள்கிறோம். அத்துடன் அன்னாரின் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்

மனைவி, பிள்ளைகள், சகோதரி கனகவல்லி மைத்துனர்கள், மருமக்கள்.

து. வேணுகோபால்
கேணியடி லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். C 4080

## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ ஜேர்மனி
★ பிரான்ஸ் ★ கொலண்ட்
★ பெல்ஜியம் ★ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்

மற்றும்

பாஸ்போட், பொன்ட் (BOND), விஸா, ரிக்கற் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.
உடன் தொடர்பு கொள்ளவும்.

INTERSUN GROUP,

சின்னத்தம்பி அவெனியு,
(மகளிர் கல்லூரி அருகாமை),
மானிப்பாய். (A-1029)

### மணிவாக்கு

அடிமைத்தளைகளைப் பூண்டு இலக்கியக் கல்வி கற்பதைவிட சுதந்திரப் பேற்றுக்காக எழுத்துவாசனை அறியாதவர்களாயிருந்து கல்லுடைத்துப் பிழைத்தல் மேல்.

— மகாத்மாகாந்தி

## நமது நோக்கு

# இந்திய சுதந்திர சிந்தனைகள்

சோஷலிச சித்தாந்த பேராசிரியரும் இங்கிலாந்தின் பிரபல அரசியல் ஞானியுமான ஹரல்ட் லஸ்கி சொன்ன சுவையான கதை ஒன்றை இன்று நினைவுகூரவேண்டியிருக்கிறது.

இந்திய சுதந்திரத்தைப் பற்றி ஒரு இந்துப் பண்பாளனுடன் நான் உரையாடிய போது, ''இங்கிலாந்து உங்கள் நாட்டைவிட்டு வெளியேறினால் 18-ம் நூற்றுண்டில் நாடு இருந்த குழப்ப நிலைக்குத் திரும்பாதா?'' என்று வினவினேன். 'ஆம்'' என்று விசனத்துடன் பதிலளித்தார். ''அதனைத் தொடர்ந்து கொடுங்கோன்மை - பல சர்வாதிகார அரசுகள் தலையெடுக்கலாமல்லவா?'' என்றேன்.

''ஆம், அதற்கும் இடமுண்டு'' என்றார்.

''எனவே பழைய குருடியின் கதைபோல தேசத்தில் அராஜகம் மீண்டும் பரவும்'' என்றேன்.

''ஆம், அந்த அச்சம் உண்டு'' என்று பதிலளித்தவர், நீண்டநேரத்துக்குப் பின் ''ஆனால் அந்தக் கொடுங்கோலும் அராஜகமும் எங்கள் சொத்துக்களே'' என்று அறைந்துவிட்டார்.

பேராசிரியர் லஸ்கி இந்திய சுதந்திரத்தை ஆதரித்த உலக சோஷலிச தலைவர்களில் ஒருவர், சாதாரண இந்தியப் பண்பாளனின் சுதந்திர வேட்கையைப் படம்பிடிக்கவே இந்த உண்மைக் கதையைச் சொன்னார்.

இன்று 39 வருடங்களின் பின் பாரதப் பண்பாடு ஒன்றே என்பது நிலைத்திருப்பதை உலகம் காண்கிறது. இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தி தமது பாட்டனாரைப் போல் தமது அன்னையைப் போல் டில்லி செங்கோட்டையில் நேற்று நிகழ்த்திய சுதந்திரப் பேருரையில் அதனைக் குறிப்பிட்டிருப்பது அமைதி இழந்திருக்கும் உலகுக்கு ஆறுதல் அளிக்கும்.

இந்தியப்பிரதமரின் பேச்சைக் கேட்டவர்கள் பலர் இந்தி புரியாதவர்களாக இருந்தாலும் எல்லாமொழிகளுக்கும் மேலான உள்ளத் தூய்மை உணர்த்தும் பொது மொழி ஒன்றினைக் கேட்டவர்களே.

''நான் பேசும் மொழி தனக்கு விளங்கவில்லை என நேரு சொல்கிறார். ஆனால் மொழி என்பது இரண்டு இதயங்களின் இணைப்புக்குத் தடையே இல்லை. நான் போனபின் என்னுடைய மொழியை அவர் தான் பேசுவார்'' என்றார் மகாத்மாகாந்தி.

அந்த மொழியை நம்மிற் பலர் நேற்றுக் கேட்டோம். பேரன்மார் இருவரின் மொழி அது என்பதில் அதிக சந்தேகம் இல்லை. மகாத்மாவின் பெயரைச் சூடிய நேருவின் பேரனான 'டபிள்' பேரன் ராஜீவ் இன்று உலகத்தலைவர்களில் ஒருவராக மதிக்கப்படுகிறார். வசை ஒழிந்த வாழ்வை மட்டுமல்ல இசைபட்ட வாழ்வை மக்களுக்குவழங்கி வருகிறார்.

உலகிலுள்ள மிகப்பழைய மதம், சத்தியத்தை சத்தியபாக உணர்த்தும் மதம் என்பதால் ஆண்டவன் சித்தமே 1893ல் 30 வயதுடைய சுவாமி விவேகானந்தரை அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்தது.

மதம்வேறு நாடுவேறு என்பதால் மனிதகுலம் வேற்றுமை அடையக் கூடாது உலக மக்கள் அனைவரும் ஒருவரோடு ஒருவர் மனித தருமத்தால் பிணைக்கப்பட்ட சகோதர, சகோதரிகள். சிக்காகோ மாநாட்டில் சுவாமி ஆற்றிய சொற்பொழிவின் சாரம் இது

அகில உலகும் பாராட்டிய அன்றைய வெற்றிக்குப்பின் இன்று சுவாமியில் பேரபிமானம் கொண்ட 40 வயதடைந்த இந்தியப் பிரதமர் ராஜீவ் அறநெறியின் தாற்பரியத்தை, உலகில் அமெரிக்காவில் மட்டுமல்ல ஆசிய ஆபிரிக்கநாடுகளில் 21வது நூற்றாண்டுக்குப் பொருத்தமான முறையில் விளக்கிவருகிறார்.

பயங்கரவாதத்தின் பிடியில் அகப்பட்டிருக்கும் பல நாடுகளில் இன்று இந்தியாவும் ஒன்றெனலாம்; ஆனால் ஒரேஒரு வேறுபாடு, இந்தியாவுக்கும் சுதந்திரம் கிடைத்தது; கிடைத்த சுதந்திரத்தை அது மக்களுக்கு அளித்துவிட்டது.

இன்று இலங்கை உட்பட அண்டைய நாடுகளின் நிலை என்ன என்பது வெளிப்படை. எனவே சுதந்திரத்தைச் சுவைக்கமுடியாத மக்கள் அதற்குப் போராடுவதும், சுதந்திர வாழ்வைக் குலைக்கும் வகுப்புவாதக் கலவரமும் ஒன்றெனவாதாடும் அரசியல் அறிவிலிகளுக்கு பாரதம் குன்றின் மேலிட்ட விளக்கெனக் கொள்க.

# மானும் மயிலும் ஆடிடும் சோலை

மானும் மயிலும் ஆடிடும் சோலையை கந்தர்மடத்தடிச் சந்தியில் காணமுடிந்தது.

எத்தனையோ மைல்களுக்கு அப்பால் சென்று நாம் காண வேண்டிய இவ்வித வன விலங்குகளையும் பறவைகளையும் நகரத்தின் மத்தியில் இயற்கைச் சூழலில் இலகுவாகக்காணக் கூடியதாக இருந்தது.

பண்டிதர் சரணாலயத்தில் தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் இந்தக்காட்சிகளைக் கண்டு களித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

புள்ளி மான், மரை, முயல், பன்றி, கழுதை, கீரி, சீமை எலி, சிறியவகைப்பன்றி, குரங்கு, குதிரை, காட்டுப் பன்றி, மர அணில், முதலை, ஆமை, ஆபூர்வ அமைப்பிலமைந்த வெளிநாட்டு நாய், மயில் வான் கோழி, கினிக்கோழி, பருந்து, குயில், நாரை, வாத்து, புறா, கிளி, பட்டுச் சிறகடித்துப்பறக்கும் காதல் பறவைகள் இவையெல்லாவற்றையும் சுதந்திரமான இயற்கை சூழலில் இந்த சரணாலயத்தில் பார்க்க முடிந்தது.

மக்கள் இவற்றைக்கண்டு களிக்க இதனை ஏற்பாடு செய்தவர்கள். சுமார் மூடபதினாயிரம் ரூபா வரை செலவிட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

வெறும் கண்காட்சியாக மட்டும் இது இல்லாமல் மக்கள் உள்ளங்களில் ஜீவகாருண்யத்தையும் சேர்ந்து பழகும் தன்மையையும் இந்த சரணாலயம் ஏற்படுத்தவேண்டும் என்பது தமது நோக்கங்களில் ஒன்று - என இதன் ஏற்பாட்டாளர்களில் ஒருவர் கருத்து தெரிவித்தார்.

சடைத்து விரிந்த வேம்பும், புளியும் இன்னும் சில வளர்ந்த மரங்களும் சரணாலயத்தை சோலையாக்கிக் கொண்டிருக்கின்றன.

பச்சைக்குழந்தைகளை, எதிர்கால சந்ததியினரை மகிழ்விக்க எத்தனை ஏற்பாடுகளை இந்த ஏற்பாட்டாளர் செய்துள்ளார்கள் என்பதனையும் பார்க்க முடிந்தது.

எத்தனையோ பிரச்னைகளுக்கு மத்தியில் தமது குழந்தைகளை ஊஞ்சலிலும் சுழல் ராட்டினங்களிலும் விளையாட்டுப்பலகைகளிலும் உட்காரவைத்து தாலாட்டித் தம்மை மறந்து மகிழ்ந்து ரசித்துக் கொண்டிருந்தார்கள். தாய்மார்கள்.

உடைந்த சிற்பங்கள் சில ஆங்காங்கே உயிர்பெற்று நின்றதையும் சரணாலயத்தின் சில பகுதிகளில் காண முடிந்தது சரணாலயத்தை சரண கமலாலயமாக இவை மாற்றிக் கொண்டிருக்கிறது.

உயிர்காக்கும் மூலிகை வகைகள் இந்த சரணாலயத்தில் ஒரு புறத்தில் வளர்க்கப்பட்டுள்ளன. இந்த மூலிகைப் பண்ணையில் சில அரிய மூலிகைகளை மிகக் கஷ்டப்பட்டு சேகரித்து வளர்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இடம்போதாமை தெரிகிறது. இதனை இன்னும் விஸ்தரிக்க இதன் அமைப்பாளர்கள் இயன்ற முயற்சிகள் மேற்கொண்டு வருவதாக அறிய முடிந்தது.

இந்த சரணாலயத்தின் வளர்ச்சிக்கு தேவையான ஆலோசனைகள் பொருள்கள், மற்றும் வசதிகள் பொது மக்கள் தாராளமாகக் கொடுத்து உதவலாம் என எதுர்பார்க்கப்படுகிறது. அனாதைகளாக விடப்பட்ட மிருகங்களுக்கு இது புகலிடமாகவும் இருப்பதால் பராமரிக்க முடியாதவர்கள் தாம் வளர்க்குள் பிராணிகளை இவர்களிடம் ஒப்படைத்தால் ஆதரவுடன் பாரமரிக்கப்படும் என இதன் அமைப்பாளர் ஒருவர் தெரிவித்தார். 'மிருகங்களிலும் அகதிகள் இருக்கின்றார்கள்' என அவர் கூறியபோது சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை!

வீட்டிலும் விவசாயப் பண்ணையிலும் உபயோகிக்கத் தக்க கையால் இயங்கும் பொருத்தமான தொழில் நுட்பத்தில் அமைந்த நீர்ப் பம்பி இந்த சரணாலயத்தில் காட்சிக்கும், விற்பனைக்கும் வைக்கப்பட்டுள்ளது. நமது மண்ணின் தேவையை நன்குணர்ந்து நமது மண்ணிலேயே தயாரிக்கப்பட்டவை ''மண்ணோடு மலர்ந்தது மானம்'' இந்தக் கவிதை வரிகள் பொருத்தமாகவே இருக்கின்றன.

சலித்த வாழ்க்கையில் ஒருவித பிடிப்பை சந்தோஷத்தை, இந்த சரணாலயம் ஏற்படுத்துவதோடு நீண்ட எதிர்கால நம்பிக்கையையும் அளித்துக் கொண்டிருக்கின்றது. மிக்க பயனுள்ள முயற்சி.

-கணேஷ்

1950/60 ஆண்டுக் காலப் பகுதியில் திரு. நா. ப. பாலசந்திரன் அவர்களைத் தெரியாத இசைப்பிரியர்கள் இலங்கையில் கிடையாது.

இலங்கை வானொலியில் பாடிவந்த இசைக் கலைஞர்களை ஒன்று சேர்த்து ''இலங்கைவானொலி இசைக்கலைஞர் மன்றம்'' ஒன்றை இவர் உருவாக்கி இசைக்கலைக்கும், கலைஞருக்கும் அளப்பரிய சேவைசெய்தார்.

அவர் தமிழிசையை வளர்க்க வேண்டுமென்றபேரவாவோடு தனது சொத்து சுகங்களையெல்லாம் மறந்து அல்லும் பகலும் அதற்கெனவே உழைத்தார். இலங்கை வானொலியில் தமிழ்ப் பாட்டுக்களை அதிகம் பாடவேண்டுமென்று ஒரு போராட்டமே நடத்தி வெற்றி கண்டார்.

## தமிழிசை உலகின் பேரபிமானி

அந்த நாட்களில் தியாகராஜ சுவாமிகளுடையதெலுங்குக் கீர்த்தனைகளைப் பாடினால் தான் அந்தப்பாடகர் ஒரு சங்கீதவித்துவான் என்ற நிலை இருந்தது. அதற்கடுத்தாற்போல் முத்துஸ்சுவாமி தீக்ஷிதருடைய அல்லது சியாமா சாஸ்திரிகளுடைய வடமொழிப்பாடல்கள் பாடப்படவேண்டுமென்ற நியதி இருந்தது. இதற்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைக்க இமாலயப் போராட்டம் நடத்தி பொதுமக்களின் உதவியுடன் படிப்படியாக வெற்றியும் கண்டார்.

வானொலித் தமிழ்க்கலைஞர் மன்றத்தின்மூலம் தமிழிசையை வளர்த்ததோடு நூற்றுக் கணக்கான சிறுவர் சிறுமியர்க்கும், மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் இலவசமாக தமிழ் இசையையும், பண்ணிசையையும் தமக்கே உரித்தான இலகுமுறையில் கற்றுக்கொடுத்து எமதருங் கலையை பரப்பிய செம்மல் பேராசிரியர் இலக்குமணப் பிள்ளை, பெரியசாமித்தூரன், கோபாலகிருஷ்ணபாரதியார், முத்துத்தாண்டவர், தண்டபாணிதேசிகர், பாபநாசம் சிவன், ஆனையாபிள்ளை, தஞ்சைப் பொன்னையாபிள்ளை, மதுரை பொன்னுச்சாமிப் பிள்ளை, நீலகண்டசிவன், அருணாசலக்கவிராயர் போன்றோர்களின் பாடல்களையே தமது மாணவர்களுக்குக் கற்பித்துவந்தார்

இவர் இசைப்பேரறிஞர் எம். எம். தண்டபாணிதேசிகர், இசை ஆராய்ச்சியாளர் ரீ. ஏ சம்பந்தமூர்த்திஆச்சாரியார், நாதஸ்வரசக்கரவர்த்தி திருவாவடுதுறை ராஜரத்தினம்பிள்ளை ஆகியோருடன் நெருங்கிப்பழகினார்.

கோபாலகிருஷ்ணபாரதியாரின் பஞ்சரத்தினக் கீர்த்தனை

(4-ம் பக்கம் பார்க்க)

# இக்காலத்திலா இந்தச் சில்லெடுப்பு?

''எந்த ஒரு மனிதனும் ஒரு தனிப்பட்ட தீவைப் போன்றவனல்ல. அகில உலகின் ஒருபகுதியே என்றவேதாந்தக் கருத்தை விளக்கியவர் ஆங்கிலப் புலவர் ஜோன்டன் என்பவர்.

இதன்ஆழத்தை இன்று யாழ்ப்பாணத்தில் வாழும் மக்கள்-பண்டிதரோ பாமரரோ- புரியும் நிலையில் இல்லை.

நாம் ஒடுக்கப்பட்டமக்கள் என்றஉணர்வு மட்டுமல்ல; நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து எல்லாவகையிலும் துண்டிக்கப்பட்டும், எல்லா வழிகளிலும் தினசரி தண்டிக்கப்பட்டும் வாழ்க்கை நடத்துகின்றோம்.

துன்பத்தைத் தழுவிக் கொண்டபோதும், ஒரு நாள் ஒளிபிறக்கும் என்ற நம்பிக்கையுடன் வாழப்பழகுகிறோம். இக் காலகட்டத்தில் எங்கள் கையிருப்பில் உண்டான பெரும் நிதி யாழ்.பல்கலைக்கழகம்.

அதன் நீண்டகால வரலாறும், இன்றைய நிலையும், எதிர்நோக்கும் இடர்களும் நன்றாக அறியாதவர்களே 'உள்ளதையும் கெடுத்தான் கொள்ளிக்கண்ணன்' என்றவாசகத்திற்கு உதாரணமானவர்கள்.

இன்று இங்கு நடைபெறும் 'சிவில்' ஆட்சி புதுமையானது. இருப்பினும் மக்கள் அதற்குப் பழக்கப்பட்டு வருகின்றனர்.

பயங்கரவாதம் எது, சுதந்திரவாதம் எது என்று பிரித்துப்பார்க்கும் பாணியில் சார்க் (SARRC) மாநாடு இறங்கியுள்ளது.

இலங்கைத் தமிழ் போராளிகளை பயங்கரவாதிகள்என்று அங்கு குறிப்பிட்டபோது இந்தியா கடும் ஆட்சேபம் தெரிவித்திருக்கிறது.

எனவே முரண்பட்ட சம்பவங்களில் எது சரி எது பிழை என்று ஆராயும் முயற்சி யாழ். பல்கலைக்கழகத்திற்கு மட்டுமல்ல தமிழ் சமூகத்திற்குமே பங்கம் விளைவிக்கும்.

ரவுணும் கவுணும் ஒத்து நடப்பது எவ்வகையிலும் மாணவ சுதந்திரத்திற்கு மாறானதல்ல.

## நல்லை வடிவேலன்

''தரித்திரேம்'' என்றுசொல்லித் தாண்டவமே யாடுந்
தரித்திர மாப்பிணியைத் தாரில்—தரிக்கவிடா
மறகிருபை செய்வானே மாண்புசேர் நல்லைவாழ்
கொறகைவேல் வீரனைக்கை கூப்பு.

★

தீயகுணம் போக்குவான்; தூயகுணம் ஆக்குவான்;
மாயன் மருகனும் நல்லைவேள்—ஆயறிவை
அள்ளியள் ளிக்கொடுப்பான்; அஞ்ஞானம் போக்குவிப்பான்;
வள்ளிபங் காளனையே வாழ்த்து.

★

தீயாரைச் சேரவிடான்; தீயவினை செய்யவிடான்;
தூயாரைக் கேண்மைகொளத் தூண்டுவிப்பான்—வாயார
வாழ்த்தும் உயர்நல்லை வாழும் வடிவேலன்
ஆழ்த்துவான் இன்பத்தில் ஆண்டு.

— கவியரசு வெண்பாமணி முருகசூரியன்

[இன்று நல்லைக் கந்தன் 7-ம் திருவிழா]

## இயக்கத்தினரால்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

நேற்றுப் பிற்பகல் இச்சம்பவம் மட்டக்களப்பு வெல்லா வெளியில் இடம் பெற்றது.

சம்பந்தப்பட்ட முக்கிய நபரைக் கண்ட மற்றைய விடுதலை இயக்கத்தினர் அவரை நோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்ததாகவும் அவர் அதற்குத் தப்பித்துச் சென்ற பொழுது அவ்வழியே ரோந்து சென்று கொண்டிருந்த படையினரிடம் சரணடைந்ததாகவும் மற்ரொரு தகவல் தெரிவிக்கிறது.


## கடைசி நேர வரி விளம்பரம்

## தேவை

தட்டச்சு இயந்திரங்கள் [Type writers] சிறந்த முறையில் திருத்திக்கொடுக்கப்படும். அத்துடன் விலைக்கும் வாங்கப்படும். Fudo Enterprise, 39/17, மின்சாரநிலைய வீதி, [3ம் ஒழுங்கை], யாழ்ப்பாணம். [C-4088]

## விற்பனைக்கு

1. நல்லினப்பசு மாடுகள் (3)
2. பசுக்கன்று (1)
3. காளைக்கன்றுகள் (2)

என்பன விற்பனைக்குண்டு. இவற்றிற்கான விலைகள் கேள்விப்பத்திரம் மூலம் கோரப்படுகின்றன. மீளளிப்பு வைப்புப் பணமாக மாடுகளுக்கு ரூபா 200/-ம். கன்றுகளுக்கு ரூபா 100/-ம் செலுத்தி பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவங்களை 25-8-86 ம் திகதி மாலை 4-30 மணிக்குமுன் அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும். விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பொது முகாமையாளர்,
யாழ். மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

(A 1147

லிடோ

காலை 10-30, 2-30,
4-30, 6-30.

Dragon Lee-Aa Golden Dragon
Johnnie Chan- As Silver Snake
in
GOLDEN DRAGON
SILVER SNAKE
(Karate, Action, Thrills and Color)
Showing first time in Jaffna

கடைசி வாரம்
வெலிங்டன்
வெண்திரையில்

10-30, 2-30, 6-30

இனிய பாடல்கள் அதி பயங்கர சண்டைகள், தந்திர காட்சிகள், நகைச்சுவை நிறைந்த

சிவாஜி, ஜமுனா
வீரப்பா, நம்பியார்

தங்கமலை ரகசியம்

[புத்தம் புதிய பிரதி]
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டது.


## மானும்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

களையும் அச்சிட்டு வெளியிட்டுள்ளார். இசைப்பேராசிரியர் ரீ ஏ சம்பந்தமூர்த்தியாரைக் கொண்டு அருணகிரிநாதரின் ''கந்தரனுபூதி'' பாடல்கள் 51க்கும் இசை அமைப்பித்து சுரதாளக்குறிப்புக்களுடன் வெளியிட்டுள்ளார்.

அவரிடம் கிடைத்தற்கரிய இசை நூல்களும், ஆராய்ச்சி நூல்களும் இருந்தன இலங்கையில் இருந்த இசைச் (சங்கீத Theory) சாஸ்திரத்தை முறையாக அறிந்து கற்பித்த தகுதி வாய்ந்தவரில் அவர் முதன்மையாகத் திகழ்ந்தார். அவரது நூலகம் சுவாமி சிவானந்தர், ராமகிருஷ்ணர், விவேகானந்தர் போன்றோரின் ஞானப் பொக்கிஷங்களைக் கொண்டிருந்தது.

திரு நா. ப. பாலச்சந்திரன் அவர்களின் சமயத்தொண்டும் மிகச்சிறப்பானது அவர் 1947ம் ஆண்டிலிருந்து ரிஷிகேசம் சுவாமி சிவானந்தருடைய சீடராவார்.

யாழ் சுன்னாகத்தில் தமது இருப்பிடமாகிய ''தருபரகத்தில்'' ஒரு ''திவ்விய ஜீவன சங்கக்'' கிளையை நிறுவி பல அரியதொண்டுகள் செய்து வந்தார். தமது சொந்தச்செலவிலேயே 20க்கு மேற்பட்ட சிறிய விளக்கப்பிரசுரப் புத்தகங்களை வெளியிட்டு மக்களுக்கு உதவினார்.

தமது கடைசிக் காலத்தில் சுன்னாகம் ஐயனார் கோவில் சேவையிலும் மனம் மொழி மெய்யாற்றதம்மை ஈடுடுத்தி விண்ணுலகப் பயணத்திற்கு தமமை ஆயத்தம் செய்துகொண்டார் 16-8 85ல் வவனியா சர்வோதய நிலயத்தில் தமதுஇறுதிப் பயணத்தை தமது அகால மரணத்தால் நிறைவு செய்துகொண்டார்.

—கதிர்தணிகாசலம்


## 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்
உயர் திரு. சோமசுந்தரம் செட்டியார்
சிவஞானம் செட்டியார்
மலர்வு: 21- 0 - 1916
உதிர்வு: 16- 07- 1986

அன்பின் திருவுருவாய் பலரும் மதிக்க வாழ்ந்து எங்கள்குலவிளக்காய்திகழ்ந்த அமரர் சோ. சிவஞானம் செட்டியார் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இன்று நடைபெற இருக்கும் வீட்டுக்கிரியைகளில் பங்குபற்றுமாறு உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

அன்னாரின் மரணச்சடங்கின் போது கலந்து கொண்டவர்கட்கும் பல வழிகளிலும் உதவி புரிந்தவர்கட்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்:
காசி, சிறீ, யவி, யமோ,
டக்கிளி, இன்பம், லக்கி,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(C 4093)


### கூட்டுறவுச் சங்கங்கள்

# பம்பாய்வெங்காய உற்பத்தியாளருக்கு உதவ முன்வரவேண்டும்

நெடுந்தீவு, வெள்ளி.

''பம்பாய் வெங்காயத்தை நியாய விலையில் விற்பனவு செய்ய முடியாமலுள்ளதால் பம்பாய் வெங்காய உற்பத்தியாளர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகவேண்டியுள்ளது இப்பாதிப்பை நீக்க பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கைகொடுத்து உதவவேண்டும்'' என அராலி பம்பாய் வெங்காய உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் திரு. நா. குகராசா அவர்கள், யாழ் மாவட்ட ப.நோ. கூ. சங்கங்களின் பொது முகாமையாளர், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர், மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆகியோர் மத்தியில் உரையாற்றும்போது கூறினார்.

கூட்டம் சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. கே. சண்முகலிங்கம் அவர்கள் தலையையில் கூட்டுறவு எண் பார்வை அலுவலக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், ''போக்குவரத்துத் தடங்கல் காரணமாக உற்பத்திசெய்த பம்பாய் வெங்காயத்தை வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச்செல்வதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது. இதனால் பம்பாய் வெங்காய உற்பத்தியில் ஈடுபட்டுள்ள சுமார் 700 குடும்பங்கள் ஏறக்குறைய 27 லட்சம் ரூபாவை இழக்கவேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

''பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நியாய விலையில் கொள்வனவு செய்யும் பட்சத்தில் பம்பாய் வெங்காய உற்பத்தியாளர்களை ஓரளவாகுதல் நஷ்டத்திலிருந்து விடுவித்துக்கொள்ள இயலும்'' என்று கூறினார்.

## கொழும்பிலிருந்து வந்த தனியார் பஸ்மீது கல்வீச்சு சாரதி, இளம்பெண் காயம்

வவனியா, வெள்ளி.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிவந்த தனியார் பஸ் கல்வீச்சுக்கிலக்கானதால் சாரதியும், ஒரு இளம் பெண்ணும் படுகாயமுற்றனர். அந்தப் பஸ்ஸின் முன் கண்ணுடியும் பலத்த சேதமடைந்தது.

நேற்று அதிகாலை செக்கிராவ என்னுமிடத்தில் இத்தாக்குதற் சம்பவம் இடம்பெற்றது.

கொழும்பில் தங்கியிருக்கும் செல்வி யசோதா சம்பிராசா (வயது 21) ன்பவரே படுகாயமுற்றவர். இவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (மா)

## சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்

யாழ்ப்பாணம்,சனி

கிராமியக் கலைக் குழுவினரின் 'சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்' நாடகம் நாளை ஞாயிறு மாலை ஊரெழு கணேச வித்தியாலயத்தில் மேடையேறவுள்ளது.

## பதவிஉயர்வு

வல்வெட்டித்துறை,வெள்ளி

வல்வெட்டித்துறை தபாற்கந்தோரில் பலவருட காலமாக சிரேஷ்ட தபால் சேவையாளராகக் கடமையாற்றிய திரு. ஆர். எஸ். வேலும்மயிலும், தபால் தரம்பிரிக்கும் உத்தியோகத்தராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இவர் அகில இலங்கை தபால் தந்தி சேவையாளர் சங்க வடகிளையின் உப தலைவரும், வல்வை தபால்நிலைய நலன்புரி கழகத்தின் இணைச் செயலாளரும், சிறந்த சமூக சேவையாளருமாவார். (இ)

## லட்சுமிவிரத நோன்பு

யாழ்ப்பாணம்,சனி

இணுவில் வட்டு ஸ்ரீ கண்ணகா பரமேஸ்வரி ஆலயத்தில் இன்று காலை வரலட்சுமி விரத நோன்பு அனுஷ்டிக்கப் படவிருக்கிறது.

இன்றைய தினம் லட்சுமிக் கும்பபூசை, லட்சுமிஹஸ்சநாம அர்ச்சனை, லட்சுமி அஷ்டகம் நோன்பு நூல் பூசைகளும் நடைபெறவுள்ளன. விரதம் அனுஷ்டிப்பவர்களுக்கு நோன்பு நூலும் வழங்கப்படவுள்ளது. (வா-க)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், சனி

''இந்தோநேஷியாவில் இரண்டுவருட அனுபவம்'' என்னும் நூல் நாளை மறுதினம் நல்லை ஆதீனத்தில் பேராசிரியர் நந்தியினல் வெளியிட்டு வைக்கப்படும்.

நல்லை ஆதீனம் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெறும் இவ் வெளியீட்டு வைபவத்தில் தொழிலதிபர் திரு. க. கனகராசா நூலின் முதற் பிரதியைப் பெற்றுக் கொள்வார். திருவாளர்கள்: ஆர். வி. சுப்பிரமணியம் வித்துவான் சி. குமாரசுவாமி ஆகியோர் ஆசியுரை வழங்குவார்கள்.

ஆத்மஜோதி. ஆசிரியர் திரு நா. முத்தையா இந் நூலினை எழுதியுள்ளார். [வா]

## முதலுதவி சேவை

யாழ்ப்பாணம், சனி

யாழ் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவினர் நயினை அம்பாள் ஆலயத்தின் விசேஷ உற்சவத் தினங்களாகிய 17,18,19,20ம் திகதிகளில் மேற்படி கோவில் வீதியில் உள்ள முதலுதவிச் சிகிச்சை நிலையத்தில் முதலுதவிக் கடமைகளில் ஈடுபடவுள்ளனர்

குறிகாட்டுவான் - நயினாதீவு இறங்குதுறைக்கு இடையில் உள்ள கடற்பகுதியிலும் 'கடல் முதலுதவி ரோந்துசேவையில்' ஈடுபடவுள்ளனர்.

## விடுதலை செய்யுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம் சனி

இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்ட திரு ச. செந்துராசாவை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யுமாறு யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜப் பொதுச் செயலாளர் திரு. சி சி. வரதராசா கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரியகுளம் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்ற யாழ். மாவட்ட சனசமூகநிலையங்களின் சமாஜக் கூட்டத்தில் கலந்துகொண்டு திரும்பிக் கொண்டிருக்கையில் இவர் கடத்திச் செல்லப்பட்டார். இவர் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு சனசமூக நிலையல்களின் ஒன்றியச் செயலாளராவர். [இ]

## அரசு அறிக்கை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் கொல்லப்பட்டார்'' என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

மேலும் இருவருடன் சென்ற மற்றையவர் காயமடைந்துள்ளார் என்றும் இறந்தவர் சுகந்தமுகராசா என அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும்அரச அறிக்கை கூறுகிறது. [சி]

## விடுதலைப்புலிகள்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

லைப் புலிகளின் எதிர்த்தாக்குதலால் இராணுவத்தினர் பின்வாங்கினர் நான்கு மணிநேரம் இடம்பெற்ற மோதலின் இறுதியில் ராணுவத்தினர் இழப்புகளுடன்பின்வாங்கினர் இத்தாக்குதலின் போது விடுதலைப்புலிகளின் தரப்பில் இருவர் காயமடைந்தனர்.'' இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிரேஷ்ட சட்டத்தரணி காலமானார்

யாழ்ப்பாணம், சனி

நல்லூரைச் சேர்ந்த சிரேஷ்ட சட்டத்தரணி கே. வி. எஸ். சண்முகநாதன் நேற்று காலமானார். இவர் குற்றவியல் சம்பந்தப்பட்ட வழக்குகளில் மிகவும் திறமை மிகுந்த சட்டத்தரணியாக விளங்கினார்.

கோப்பாய் கிராம மன்றத் தலைவராக இருந்து பல அபிவிருத்திகளைச் செய்தார் இவர் அரசாங்க சட்டத்தரணியாக ஆரம்பத்தில் கடமையாற்றினார்.

## படகின்மீது ..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

குண்டு வீச்சுக்கு இலக்கான இப்படகு எரிந்ததுடன் அதிலிருந்த மூவரும் படகினுள்ளேயே கருகி மாண்டனர். [மா]

## ஜே. வி. பி.

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தொழிற்சாலை நிறுவுவதற்கு எதிராக விவசாயிகள் செய்த கிளர்ச்சி என்பனவற்றிற்கு ஜே வி. பி யின் தூண்டுதல் இருந்ததாக கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் பொலிசாருக்கு தெரிவித்தாராம்.

மேலும் ருகுணு பல்கலைக் கழகத்தில் முன்னர் பட்டதாரி படிப்பை மேற்கொண்டவர்களே இந்த வகுப்புகளை நடாத்தியுள்ளதாகவும் இந்தக் கட்சி உறுப்பினர்கள் பாடசாலைகளில் சிரேஷ்ட மாணவர்களை கட்சிக்கு சேர்த்துக் கொள்ள முற்பட்டு வந்துள்ளனர் என்றும் தெரியவந்துள்ளது. (சி)

## விரிவுரை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமது கோரிக்கைகளுக்கான போராட்டம் வெற்றியளித்ததைத் தொடர்ந்து பகிஷ்கரிப்புப் போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் மாணவர் அமைப்புக்குழு அறிவித்துள்ளது. (மா)

## கிளிநொச்சியில் —

# கி. சே. அலுவலகர் இல்லாததினால் 65,000 மக்கள் பாதிப்பு

கிளிநொச்சி, வெள்ளி

கிளிநொச்சி கிராமசேவை அலுவலர் பிரிவிற்கு கிராமசேவை அலுவலர் இல்லாமையால் பொதுமக்கள் மிகுந்த கஷ்டநிலைக்காளாகியுள்ளனர்.

65 ஆயிரம் மக்கள் சனத்தொகையைக் கொண்ட கிளிநொச்சி கிராமசேவை அலுவலகர் பிரிவை நிர்வகித்துவந்த கிராமசேவை அலுவலர் எஸ். தனபாலசிங்கம் எந்தவித காரமும் காட்டப்படாமல் மேலிடத்து உத்தரவின் பேரில் திடீரென வேலைநீக்கம் செய்யப்பட்டார்.

இதைத் தொடர்ந்து இவரது வேலையை மீண்டும் வழங்கும் வரை பதில் கடமையை மேற்கொள்வதில்லை என கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சகல கிராமசேவை அலுவலர்களும் ஏகமனதாகமுடிவெடுத்துள்ளனர்.

இம்முடிவிற்கு கிளிநொச்சி மாவட்டக் கிராமசேவை அலுவலர்கள் சங்கமும் தனது பூரணஆதரவை வழங்கி தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றி இருநீதது

இதையடுத்து கிளிநொச்சி கிராமசேவை அலுவலர் பிரிவ ஒரு கிராமசேவை அலுவலர்களும் இல்லாமல் பொதுமக்கள நலனை சவனிக்கமுடியாத நிலையில் நிர்வாக வேலைகள் அனைத்தும் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளது. (ச)

# பண்டத்தரிப்புப் பகுதியில் நான்கு வீதிகள் திருத்தம்

பண்டத்தரிப்பு, வெள்ளி

யாழ் அபிவிருத்திச் சபையின் பண்டத்தரிப்புக் கிராம உப அலுவலகப் பகுதியிலுள்ள நான்குவீதிகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

மாதகல் விளான் வீதி, சிறுவிளான் ஞானோதய ச சமூக நிலயத்தினால் பொறுப்பேற்கப்பட்டு 20 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது. மாதகல் நுணசை வீதி மாதகல் மேற்கு சனசமூக நிலயத்தினால் பொறுப்பேற்சப்பட்டு 20 ஆயிரம் ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது

மாதகல் சவுல் வீதி மாதகல் விபுலானந்தர்கிராமஅபிவிருத்திச்சங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டு 25 ஆயிரம் ரூபா செலவில் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

முள்ளானை சிறுவிளான்வீதி முளளானை கலைவாணி சனசமூக நிலையத்தினால் பொறுப்பேற்கப்பட்டு 35ஆயிரம் ரூபா செலவில் திருத்தி அமைககப்பட்டுள்ளது.

## சங்கிலி கொள்ளை

முல்லைத்தீவு, வெள்ளி

தண்ணீரூற்று என்னும் இடத்தில் கடந்த செவ்வாய் இரவு ஒரு மணியளவில் ஆயுதம் தாங்கிய பத்துக்கும் மேற்பட்ட ஒரு கோஷ்டியினர் சிவஞானம் என்பவரது வீட்டில் புகுந்து துப்பாக்கி முனையில் இரண்டு பவுண் சங்கிலியைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

வீட்டிற்குள் பலவந்தமாக நுழைந்த அவர்கள் துப்பாக்கி முனையில் வீட்டாரை நிறுத்தி பத்துலட்சம் ரூபா தரும்படி மிரட்டினரென்றும், தம்மிடம் பணமில்லையென அவர்கள் கூறியதும் 'சுட்டுவிடுவோம்' எனக் கோஷ்டியினர் பயமுறுத்தினர்கள் என்றும் கூறப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து சிவஞானத்தின் மனைவி பணம் தருவதற்குப் பத்துநாள் அவகாசம் கேட்டதையடுத்து சிவஞானத்தை விட்டுவிட்டு அவர்கள் வீடுமுழுவதும் தேடுதல் நடத்தி இரண்டு பவுண் சங்கிலியைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். [சி]

## இன்று மலர்வெளியீடு

யாழ்ப்பாணம், சனி

இசைவாணர் திரு நா. ப. பாலச்சந்திரன் மறைந்த முதலாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு நினைவு மலர் ஒன்று வெளியிடப்பட வுள்ளது.

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் இவ்வெளியீடு இடம் பெறும். மில்க்வைற அதிபர் திரு க. கனகாசா இம்மலர் வெளியீட்டை ஆரம்பித்து வைப்பார்.

# சுன்னாகத்தில் தையல் பயிற்சி நிலையம்

மாவிட்டபுரம், வெள்ளி

படித்து வேலையற்றிருக்கும் இளம் யுவதிகளுக்கு தையற் பயிற்சியை அளிக்கும் நோக்குடன் மாவிட்டபுரம் லயன்ஸ் கழகம் சுன்னாகத்தில் தையற் பயிற்சி நிலையமொன்றை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளது.

சுன்னாகம் ஸ்ரேசன் வீதியில் இம்மாதம் 23ந் திகதி இந் நிலையம் சம்பிரதாய முறைப்படி திறந்துவைக்கப்பட உள்ளது.

மாவிட்டபுரம் லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த லயன். ஏ. வி. சர்மா, லயன். ஏ. இராமநாதன் ஆகியோர் செயல்த திட்டத் தலைவர்களாகஇருந்து இப் பயிற்சி நிலயத்தை இயக்குவார்கள்.

சுன்னாகம் பகுதியிலுள் ஊ படித்த இளம் யுவதிகள் தையற் கலையில் தேர்ச்சிபெற இப்பயிற்சி நிலயம் உதவுப என எதிர்பார்க்கப் படுகிறது

இதே போன்ற பயிற்சி நிலயமொன்று மாவிட்டபுரத்தில் மேற்படி லயன்ஸ் சழகத்தால் ஏற்கனவே நடாத்தப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது. [எ]

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண மேற்றிராசன சேமலாப சங்கத்தின் 57-வது வருடாந்தப் பொதுக்கூட்டம் எதர்வரும் 19-ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை மேற்படி சங்கப் பணிமனையில் நடைபெறும். [எ]

## விழிப்புலனற்றோர் தொழிற் பயிற்சி கூடம்

யாழ்ப்பாணம், சனி

யாழ். விழிப்புலனற்றோர் சங்கப சுமார் இரண்டு லட்சம் ரூபா செலவில் விழிப்புலனற்றோர்களுக்கான தொழிற் பயிற்சிகூடம் ஒன்றை கைதடி நவீல்ட் பாடசாலைக்கு அருகில் அமைத்து வருகிறது.

கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த கட்டிட வேலைகள் இவ்வருட இறுதிக்குள் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

பொதுமக்கள் பொது ஸ்தாபனங்களின் ஆதரவுடன் கட்டப்பட்டு வரும் இத்தொழில் பயிற்சி கூடத்திற்கான ஆதரவையும் ஸ்தாபனங்கள் வழங்குமென எதிர்பார்ப்பதாக சங்க காரியதரிசி ஆ. ரவீந்திரன் தெரிவித்தார். (சி)

## சிரமதானமூலம் குளம் திருத்தம்

பருத்தித்துறை, வெள்ளி

துன்னாலைவடக்கு பகுதியில் பயனற்றிருந்த குளம் சிரமதான மூலம் ஆழமாக்கப்பட்டுள்ள

துன்னாலைவடக்கு பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் திரு. தி. சுபேந்திரராசாவின் முயற்சியையடுத்தே இக்குளம் சிரமதான மூலம் திருத்தப்பட்டுள்ளது. அக்கிராமத்தைச் சேர்ந்த சுமார் 30 பேர் இச் சிரமதான முயற்சியிலீடுபட்டனர்.

இக்குளம் திருத்தப்பட்டதனால் இப்பகுதி விவசாயிகள், கால்நடைகள் பெரும் பயனடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ]

# வன்முறைகளினால் வெளியேறியோரை அதே பகுதியில்குடியமர்த்த திட்டம்

கொழும்பு, வெள்ளி

வன்முறை சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து வெளியேறிய சுமார் மூன்றுலட்சம் அகதிகளை மீண்டும் அவர்களது சொந்த இடங்களில் குடியேற்றுவதற்கான பாரிய திட்டம் ஒன்றை புனர்வாழ்வு அமைச்சு தயாரித்துள்ளது

பாதிக்கப்பட்ட இந்தப் பகுதிகளில் எதிர்காலத்தில் சமாதான நிலை ஏற்படக் கூடிய சூழ்நிலை தென்படுவதால் அரசாங்கம் பல பொது ஸ்தாபனங்களின் ஆலோசனை மேற்கொண்டு இத் திட்டம் வெகுவிரைவில் மேற்கொள்ளப்படவுள்ளதாக புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் திரு. ஒக்ஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

தற்போது அகதிகள் முகாம்களில் சுமார் 50,ஆயிரம் பேர் உள்ளனர். மற்றும் உணவுப்பங்கீட்டுப் பொருள்களை பெற்று 66 ஆயிரம் பேர் அகதிகள் முகாம்களிற்கு வெளியே உறவினர்கள், நண்பர்கள் ஆதரவில் வசித்து வருகிறார்கள்.

இவர்களை தவிர அம்பாறை மாவட்டத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற சம்வங்களையடுத்து சுமார் 15ஆயிரம்பேர் சொந்த இடங்களை விட்டு வெளியேறியுள்ளதாகவும் அவர் கூறினார்.

மேலும் நாட்டில் சமாதான நிலை ஏற்படும்பட்சத்தில் இந்தியாவிலுள்ள சுமார் ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் இலங்கை அகதிகளில்இங்குவர விரும்புவோரின்சகல விபரங்களையும் சேகரிக்க இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதுதரகத்தினதும் இந்திய அரசினதும் உதவிகளை பெற்றுக்கொள்ளப்படும் எதிர்வரும் டிசம்பர் மாதமளவில் இத்திட்டம் முழுவதும் தயாரிக்கப்பட்டு விடும என்றும் கூறினர். [சி]

## இன்று நடக்கும் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், சனி

பாஷையூர் பகுதி பத்திரிகை வாசகர் வட்டம் நடாத்தும் 'சமீபகால இலக்கியம்' பற்றிய கருத்தரங்கு பாஷையூர் 2-ம் குறுக்குத்தெரு 'அனலாய்' ஸ்தாபனத்தாரின் இல்லத்தில் சட்டத்தரணி ரி.எம். அன்ரனிப்பிள்ளை தலைமையில் இன்றுபிற்பகல் நடைபெறும்

பாஷையூர் புனித-அந்தோனியார் இளைஞர் கழகம் சார்பில் கழகத்தலைவர் பே அன்ரனிதாஸ் கவிஞர் தேவதாசன், பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் பாடசாலை ஆரிசியை திருமதி பூமலர் பிலிப் ஆகியவர்களும் கருத்துரை வழங்குவார்கள்

திரு. வ. அல்பிறற் தலைமையில் இசையரங்கு நடைபெறும். பத்திரிகையாளர்களும் கலந்துகொள்வர். [ஆ]

## 'பரந்தநோக்குடன் சேவையாற்ற வேண்டும்'

வட்டுக்கோட்டை, வெள்ளி

''தனித்த மக்களோ அல்லது தனித்த குழுவினரோ குறுகிய வட்டத்துள் நின்று செயற்படக் கூடாது. பரந்த நோக்குடன் தமது சேவையை விஸ்தரிக்க வேண்டும். மாணவர்களுக்கான இந் நூலகப் தனது சேவையை விரிந்த முறையில் ஆற்றும் என நான் நம்புகிறேன்''

இவ்வாறு வட்டுக்கோட்டை கலைவாணி கல்வி நிலயத்தினரின் மணவர் நூலகத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய திரு வ. யோகானந்தசிவம் கூறினார்.

செல்வன் பா. யோகசரன் தலைமையில் நடந்த இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் றெமிங்ரன் கல்லூரி நிர்வாகி ரு மனோகரன் கலந்து கொண்டார்.

இவ்விழாவில் ரவிமாஸ்டர், டாக்டர் கணேசலிங்கநாதன், திரு செ, பரராசசேகரம், திரு வ சதானந்தசிவம், திரு. என். கடம்பன் ஆகியோரும் உரையாற்றினர்.

மாணவர்களது கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றது (வா)

## றகிங் பிரச்னை—

# திருநெல்வேலி வாழ் மக்கள் தரும் விளக்கம்

யாழ்ப்பாணம், சனி

''ஸ்ரீலங்கா அரசின் அடக்குமுறைக்கு நாளுக்குநாள் உட்பட்டு எமது உயிர் உடமைகளையும் மண்ணையும் இழந்து வரும் இவ்வேளையில் 'றகிங்' என்ற போர்வையில் புதிய மாணவமாணவிகள் உள-உடலியல் ரீதியில் துன்புறுத்தப் படுவது நிறுத்தப்படல் அவசியம்''.

இவ்வாறு ''யாழ். பல்கலைக் கழக மாணவர்களின்போக்கில் மாற்றம் வேண்டும்'' என்ற தலைப்பில் 'திருநெல்வேலி வாழ் மக்கள்' பெயருடன் வெளியிடப்பட்டுள்ள துண்டுப் பிரசுரமொன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

''எந்த ஒரு நாட்டின்தேசிய இனவர்க்க விடுதலைப்போராட்டத்திலும் பல்கலைக்கழக மாணவர்களின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்து வந்துள்ளது. அந்த வகையில் யாழ். பல்கலைக்கழகத்தின் பங்களிப்பும் எமது விடுதலைப் போராட்டத்தில் குறிப்பிடக்கூடிய விதத்தில் அமைந்திருந்ததை அனைவரும் நன்கறிவர்,

''ஆனால் அண்மைக்காலமாக யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் ஒரு பகுதியினரின் போக்கு விடுதலையை நேசிப்பவர்கள் மத்தியில் வேதனையை யூட்டுகிறது தமது உயிர்களையும் உணர்வுகளையும எமது தாய்நாட்டு விடுதலைக்காக தியாகம்செய்துவரும் புனிதமான ஒரு இயக்கம் இவ்விடயத்தில் எடுத்த ஒரு நடவடிக்கை நியாயமானதும் தவிர்க்க முடியாததும்கூட இப்புனிதமான அமைப்பை ''வெளியார் என்ற சொற்பதத்தின் மூலம்'' எம்மிடமிருந்து அந்நியப்படுத்த பல்கலைக் கழக மாணவர்கள் முயற்சிப்பது கண்டிக்கப் படவேண்டிய விடயம்.

## 60 பேருக்கு கண்ணாடிச்சட்டங்கள்

மாவிட்டபுரம், வெள்ளி

மாவிட்டபுரம் லயன்ஸ் சழகத்தால் மேலும் 60 பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடிச் சட்டங்கள் வழங்கப்பட்டன

மேற்கு ஜெர்மன் லயன்ஸ் சழகத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட மேற்படி கண்ணாடிச் சட்டங்களின் ஒருபகுதி ஏற்கனவே இப்பகுதியைச் சேர்ந்த வசதியற்றவர்களுக்கு வழங்கப்பட்டன

அதில் எஞ்சிய 60 கண்ணாடிச்சட்டங்கள் கடந்த 9ம் திகதி மாவிட்டபுரம் லயன்ஸ் தையற் பயிற்சி நிலயத்தில் வைத்து லயன் பி ஜே அந்தோனிப்பிள்ளை தலைமையில் வழங்கப்பட்டது.

மாவிட்டபுரம் லயன்ஸ்கழக செயலாளர் லயன் ராஜா என். வீரசிங்கம் இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தார், [எ]

## அதிபருக்கு பாராட்டு

மானிப்பாய், வெள்ளி

''தனது சொந்த நலனைவிட மாணவர்களது நலனை பெரிதாக மதித்து தமது பணியினை சலியாது மேற்கொண்டு பாடசாலையை சகல விதத்திலும் வளர அரும்பாடுபட்டவர் அதிபர் திரு. கந்தவனம்''

இவ்வாறு தையிட்டி சிவகுருநாத வித்தியாசாலையின் பெற்றோர் ஆசிரியர் சங்க காரியதரிசி எஸ் சின்னத்துரை இப்பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெறும் அதிபர் ரி. கந்தவனத்துக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசார வைபவத்தில் பேசுகையில் கூறினர்.

மேலும் அவர் தமதுரையில் ''ஒரு ஆசிரியரும் பத்துமாணவர்களும் பயின்றுவந்த இப் பாடசாலையை நன்கு ஆசிரியர்களும் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களும் பயிலக் கூடிய வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தவர் அதிபர் கந்தவனம் அவர் தமது 35 வருடகால சேவையில் பல மாணவர்களது எதிர்கால சிறப்புக்கு பெரும்வழி காட்டினார்'' என்றார்.

ஆசிரியர் திரு செ. அருணசலம் நன்றி கூறினர். [எ]

# 'இந்தியாவைச் சீர்குலைக்க முயலும்—— அந்நியசக்திகளுக்கு எதிராக விழிப்பாயிருக்கவேண்டும்"

## இந்திய ஜனுதிபதியின் சுதந்திரதினசெய்தி

புதுடில்லி ஆகஸ்ட்15

"இந்தியாவை சீர்குலைக்கமுயலும் அந்நிய சக்திகளுக்கெதிராக மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும்" இவ்வாறு இந்தியாவின் 39-வது சுதந்திரதனத்தை முன்னிட்டு இந்தியஜனுதிபதி ஸெயில் சிங் விடுத்துள்ள செய்தியில் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஜனுதிபதிபதி தமது செய்தியில் இந்தியாவில் பொறுப் பற்றமுறையில் இடம்பெற்று வரும் வன்செயல்களால் பல அப்பாவி உயிர்சள் பலியாகியுள்ளதாகவும் கவலை தெரிதெரிவித்தார். இத்தகையபிரச்னைகளில் சம்பந்தப்பட்டுள்ளவர்கள் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் பிரச்னைகளை அணுகாவிட்டால் பிரச்னைகளுக்கு நிரந்தரதீர்வு காணுதல் கஷ்டமாக இருக்கும் என்றும் வலியுறுத்தியுளார்.

இந்திய பிரஜைகள் அனைவரும் எந்த அரசியல் சித்தாந்தத்தைக் கடைப்பிடித்தாலும் எந்த அரசியல் கட்சியை ஆதரித்தாலும் தமது பிரச்னைகளிற்கு சமரசமான தீர்வை ஏற்படுத்த சமாதானவழிகளையே நாடவேண்டுமென்றும் அதுதான்நாட்டிற்கு நன்மை ஏற்படுத்தக்கூடியதாகுமென வும் ஜனுதிபதி தமது சுதந்திர தினச்செய்தியில் குறிப்பிட்டுளளார். (க)

## 'உதவிவைத்திய மாணவரின் தரம் மிகவும்உயர்ந்துள்ளது'

பருத்தித்துறை வெள்ளி

"உதவிவைத்திய பயிற்சி நெறி மருத்துவப் பயிற்சி நெறியைவிட எந்தவகையிலும் குறைந்ததல்ல. எண்பத்தைந்து சதவீதமான நோயைக் குணப்படுத்தக்கூடிய வகையில் அவர்கள் பயிற்றுவிக்கப் படுகிறுர்கள். மருத்துவக்கல்வியானது சர்வதேச தரம் சம்பந்தமான வரையறையுள்ளது. உதவி வைத்தியர்களோ இந் நாட்டின் சுகாதார தேவை கருதி அதற்கேற்றமுறையில் பயிற்றுவிக்சப்படுகிறுர்கள். எனவே அவர்களுடையபயிற்சியாக்கம் தனிச்சிறப்பும் முழுமையும்வாய்ந்ததாகும்."

இவ்வாறு யாழ். மருத்துவபீட உதவிவைத்திய மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்ச்சியிலே கலந்துகொண்டுஉரையாற்றிய வைத்திய பீடாதிபதி பேராசிரியர் எஸ். சிவஞானசுந்தரம் [நந்தி] குறிப்பிட்டார். அவர்தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"வைத்தியப்பணி ஒரு தூய்மையான சிறந்த பணியாகும். வைத்திய சேவையிலுள்ளவர்சள் தன்னை முழுமையாக ஒப்படைக்கின்ற நோயாளிகளைக் குணப்படுத்தும்போது மனித நிலையினின்றும் சற்று உயர்ந்த நிலையில் நின்று இயற்கை உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு சேவையாற்றவேண்டும். இதன்மூலமே வைத்தியசேவையின் புனிதத்துவமும் முழுமையும் பெறப்படுகின்றது."

யாழ். மருத்துவபீட சமூக மருத்துவவியல் பகுதித் தலைவர் வைத்திய கலாநிதி என். சிவராஜா உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

"மாணவர்கள்தமது தலைமைத்துவப் பண்பைவெளிப்படுத்தவும் தங்கள் நன்றியை தெரிவிக்கவும் இதுபோன்ற நிகழ்ச்சிசள் வாய்ப்பளிக்கின்றன இந் நிசழ்ச்சிகளில் ஏற்படுகின்ற அனுபவங்கள் ஆரம்பசுகாதார கவனிப்பில் முதுகெலும்பாக இருக்கப்போகின்ற உதவி வைத்தியர்களுக்குச் சிறந்த வாய்ப்பை வழங்குகின்றது"

உடற்றொழிலியல் பகுதித் தலைவர் பேராசிரியர் எஸ். பரமேஸ்வரன் உரையாற்றுகையில் "உதவி வைத்திய மாணவர்களின் தரம் வெகுவாக உயர்ந்துள்ளது" என்ருர்.

திரு.சுவாமிநாதன் தலைமையில் நடைபெற்ற இர்தஒன்றுகூடல் வைபவத்தில் சிரேஷ்ட மாணவர்களின்சார்பில்செல்வி புஷ்பலதா நாகலிங்கம் உரையாற்றினர். [இ]

## லெபனுனில் மீண்டும் கார்க்குண்டுவெடிப்பு

### 20 பேர் பலி: 100 பேர் காயம்

### மூன்று கிழமைகளில் 7-வது குண்டு வெடிப்பு

பெய்ரூட் ஆக 15

லெபனுனின் தலைநகரான பெய்ரூட் நகரில் குண்டொன்று வெடித்ததினுல் குறைந்தது 20 பேராவது கொல்லப் பட்டனரென அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. சுமார் 100 பேர்வரை காயமடைந்துள்ளனர்.

கிழக்கு பெய்ரூட் நகரின் கடைத்தெருவொன்றில்நிறுத்தப்பட்டிருந்த காரொன்றிலிருந்தே குண்டுவெடித்ததெனத் தெரியவந்துள்ளது.

குண்டுவெடித்தவுடன் அவ்விடத்தில் பெரும் தீயொன்று மூண்டதாகவும் அவ்விடத்தில் நின்றிருந்த மக்கள் உயிருடன் எரிந்து சாம்பரானதாகவும் அங்கிருந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

சிலர் குண்டுவெடிப்பினுல் இடிந்துபோனகட்டிடங்களின் இடிபாடுகளுக்குள் சிக்கிமாண்டுபோனதாகவும் தெரிய வந்துள்ளது.

பெய்ரூட் நகரில் கடந்த 3 கிழமைகளில் நடைபெற்ற ஏழாவது குண்டு வெடிப்புச் சம்பவம் இதுவாகும் இவற்றில்நான்கு குண்டுகள் காரில் பொருத்தப்பட்டு வெடிக்க வைக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

### பெய்ரூட்டில் மோதல்

இக்குண்டுவெடிப்பையடுத்து அங்குள்ள கிறிஸ்தவ தீவிரவாதிகளிடையே மோதலிடம் பெற்றதாக அறிவிக்கப்படுகிறது. பெய்ரூட்டில் கிறிஸ்தவர் வாழும் பிரதேசங்களையும் முஸ்லிம்கள் வாழும் பகுதிகளையும் பிரிக்கும் 'கிறீன் லைன்' அருகிலேயே இம் மோதல்கள் இடம்பெற்றுள்ளன. தன்னியக்கத் துப்பாக்கிகள், ஆர்.பி ஜி துப்பாக்கிகள் போன்றவை பயன்படுத்தப்பட்டதாக பெய்ரூட் மக்கள் செய்தித்தாபனங்களிடம் கூறியுள்ளனர். (ஊ)

உலகச் செய்திகள்


ரெருசோ ஷிப்ஸ்

TERRAZZO CHIPS

IMPORTED

- ✶ கலர் பவுடர் (எல்லா வர்ணங்கள்) (GERMAN AND HOLLAND)
- ✶ அலுமினியம் தகடுகள் (18g x 16g)
- ✶ வெள்ளைச் சிமெந்து
- ★ காபரண்டம் கற்கள் (FLOOR CUTTING STONE)
- ✶ TERRAZZO மற்றும் தரைக்குத் தேவையான சகல பொருட்களும் கிடைக்குமிடம்

Rs. 6/75-க்கு மேல்

றம்சன்ஸ்

443, பழைய சோனகத் தெரு,
கொழும்பு - 12

தொலைபேசி: 34411 — 31511

A 1053



பிரயாண ஒழுங்குகள்

சவூதி-கிளீனேர்ஸ்

குவைத்-கிளீனேர்ஸ்

ஈராக்-ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ்

ஆகிய நாடுகளுக்கு வருமான ஒழுங்குகள்
அத்துடன்
பாஸ்போட், பொன்ட், ரிக்கற்றிங்
ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

யூனிவேர்சல்
ஏஜென்சி

125 (455), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[ ஆயுர்வேதக்கல்லூரிக்கு அருகாமையில்
பெற்ரோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக ]

(A 1044)



கல்வியாண்டு 87/88

போதனை பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் வெளிவாரி பட்டப் படிப்பினை மேற்கொள்ள விரும்புவோர் கவனத்திற்கு.

1. G. C. E. A/Lல் 3 பாடம் சித்தியடைந்தவர்களும் பட்டதாரியாகலாம்.
2. இதற்கான பதிவுகள், அனுமதிகள் யாவும் எமது நிறுவனத்தினுலேயே செய்து கொடுக்கப்படும்.
3. கலைமாணி (G. A. Q.), வர்த்தகமாணி (1st Com.) ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
4. B. A. மீட்டல் வகுப்புக்களும் 23-08-86 ஆரம்பமாகின்றன.

முக்கிய குறிப்பு: (B .A. வகுப்புக்கள் கூடிய மணித்தியாலங்கள் எடுத்து 3 மாதத்தில் முழுப்பாடத்திட்டமும் முடித்துக்கொடுக்கப்படும்.)

ஆசிரியர்கள்:

| G. A. Q. — B. A. | Ist COM. — B.COM. |
|---|---|
| பொருளியல்-குமாரவேல் | பொருளியல் - குமாரவேல் |
| தமிழ் - குழந்தை | வர்த்தகம் - தேவா |
| புவியியல் - குணராஜா | கணக்கியல் - மரியதாஸ் யோகராஜா |
| மெய்யியல் - வேல் சிவானந்தன் | ஆங்கிலம் - இமானுவேல் பெர்னுன்டோ |
| அரசியல் - குமார் | கணிதம் - தயாபரன் |
| இந்துநாகரீகம் - அருள்நங்கை | |

வகுப்புக்கள்பற்றிய விபரங்களுக்கு:

The Jaffna Education Centre,
பட்டப்படிப்புக்கள் பகுதி,
22, ராமையா செட்டியார் லேன் (சாந்தி சினிமா முன்பாக), யாழ்ப்பாணம்.

(A 1051)

கலர் பிலிம் சுருள்களை
PROCESSING + PRINTING
செய்வதற்கு
கொழும்பு ஸ்ருடியோ

[A 1047]





இன்று சுவாமி
இராமகிருஷ்ண பரமஹம்சர்

நினைவு தினம்

''உனது நெஞ்சிற்கு துரோகம் செய்யாதே, மனச்சாட்சியின்படி நட, நிச்சயம் உனக்கு வெற்றி உண்டாகும்.''


— ஸ்ரீ இராமகிருஷ்ணர்.

20 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 பார்சோப் மேலுறைகளை அனுப்பி சுவாமி இராமகிருஷ்ணரின் ஒரு அழகிய ஸ்ரிக்கரைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

A 1049


## சேவைக்காக தம்மை அர்ப்பணித்தவர்



அரசாங்கசேவையில்கடமை யாற்றிய போதும் இளைப்பாறிய பின்பும் மக்கள் சேவையையே குறிக்கோளாகக் கொண்டு பெரும் பணிபுரிந்த தெல்லிப்பழை வீமன்காமம் வடக்குவாசி மூத்ததம்பி சிவசம்பு தமது 75வது வயதில் அமரரானார்.

அன்னார் அரசாங்க சேவையில் சேர்ந்து இந்தியன்நாணய பரிவர்த்தனை வங்கியில் முதலில் உத்தியோகம் வகித்து பின்னர் பல்வேறு திணைக்களங்களில் கடமையாற்றி வலிவடக்கு உதவி அரசாங்கஅதிபர் அலுவலகத்தில் இறுதியாக பணிபுரிந்து இளைப்பாறினார்.

அரசாங்க சேவையில் இருந்தபோதும் சரி இளைப்பாறிய பின்பும் சரி பொதுமக்கள் சேவைக்காக தம்மை அர்ப்பணித்துவாழ்ந்த அன்னார்சொல்லிலும் செயலிலும் உண்மை நேர்மையை கடைப்பிடித்து ஏனையோருக்கு முன்மாதிரியான பெருமகனாக திகழ்ந்தார், ஆதரவற்றோர் வறியவர்கள் முதலானோரின் துயர் களைவதில் ஆர்வமுடன் செயல் பட்டார்.

சமயம், சோதிடம் கணிதம் ஆங்கிலம் ஆகிய துறைகளில் ஆழ்ந்த அறிவும் ஆற்றலும் பெற்றுத் திகழ்ந்த அன்னாரின் மறைவு பேரிழப்பு என இவ்வூர் மக்கள் கவலையுறுகின்றனர். [மாவை நிருபர்]

## இன்றைய பலன்

மாதம்- ஆடி
திகதி- 31 (16 - 8 - 1986)
கிழமை- சனி
திதி- ஏகாதசி
காலை 9.29ன் மேல் துவாதசி
நக்ஷத்திரம்- மூலம் பி. ப. வரை

மேடம்: இதயத்தின் ஏக்கம் இன்று தணியும், தேடிய பொருள் காலடியில் சரணடையும் பரோபகாரச் சிந்தை மேலிடும்.

இடபம்: கருடப் பார்வை உங்களை வட்டமிடும் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு விஷமிகள் திட்டம் போடுவார்கள். அகால போசனத்திற்கும் இடமுண்டு.

மிதுனம்: உள்ளத்தில் உவகைக்கூத்து: உறவினர்கள் வருகை, வாழ்க்கை உற்சாகம் நிரம்பியதாக இருக்கும்.

கடகம்: அதிக நம்பிக்கை ஆபத்தைத் தேடித்தரலாம். தன்னையே தனக்குதவி என்று செயலாற்றவும் மறைமுக எதிரிகள் விசமத்தனங்களில் ஈடுபடுவர்.

சிங்கம்: இறைவழிபாடு மேலிடும். இதன் மூலம் இதயத்தில் அமைதியும் ஏற்படும். முதியவர் ஒருவர் தக்க சமயத்தில் ஆதரவு தருவார்.

கன்னி: தங்கக் குணம் மேலிடும் தக்கமதிப்பும் கிடைக்கும். இனத்தவர்களுடன் தொடர்புகள் பெருகும்.

துலாம்: வசதிகள் பெருகும். வரவிலும் திருப்தி ஏற்படும்: செல்வாக்குப் படைத்தர்களின் ஆதரவு பெருகும் மக்களால் மகிழ்ச்சியும் உண்டு.

விருச்சிகம்: எதிர்பாராத வகையில் பொருள் விரயமாகும் வியாபாரத்துறையில் பிணக்குகள் தோன்றும் மனைவியின் உடல் நலம் பாதிக்கப்படும்.

தனுசு: இன்னலின் பின்னல் சோரவைததரலாம். வணிகத் துறையில் சமவருவாய்க்கு இடமுண்டு. விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை வெற்றிக்கு வழிகாட்டும்.


மகரம்: இதயப்படுதாவில் இன்பக்கூத்து. கற்றதன் பயன் இன்று கைமேல் கிடைக்கும். நுட்பமான வேலைகளில் ஈடுபடுபவர்கள் போற்றப்படுவார்கள்.

கும்பம்: மனையில் பூசல்கள் தோன்றி மறையும். தனிமையை விரும்புவர்கள். நண்பர்களே சூழ்ச்சி வலை விரிப்பர்.

மீனம்: வாகனம் செலுத்துவோருக்கு நன்மதிப்புக்கிடைக்கும். கல்வித்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும். அறஞர்களின் ஆதரவும் உண்டு.

திருமலை
வே. ரவந்திரன்

## ஈராண்டு நினைவஞ்சலி



அமரர்
சதாசிவம்
சிவரத்தினம்
[பிரபல வர்த்தகர்]

ஹோம் நீட்ஸ்,
3, Co-op Complex
கட்டிடம்,
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
ஹோம் நீட்ஸ்,
35 லோவர் வீதி,
பதுளை.
மலர்வு
19-5-1938,
உதிர்வு
08-08-1984.

அன்பின் திருஉருவாய், பண்பின் சிகரமாய் வாழ்வில் வழிகாட்டியாய் கொடை வள்ளலாய் வாழ்ந்து எம்மை எல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்தி இறைவனடி சேர்ந்து ஈராண்டு ஓடிமறைந்தாலும் எங்கள் எல்லோர் இதயத்திலும் நீங்கா நினைவாய், நிழல் போல் நிற்கும் தங்களின் ஆத்மா சாந்தி அடைய எல்லோரும் பிரார்த்திக்கிறோம்.

மலைநாடும் தமிழ் நாடும் போற்றும்
மங்காத வர்த்தக பெருமகனே
கலையார்வம் கொண்டே நாளெல்லாம்
சற்றோருடன் கலந்த திருமகனே
நிலையான நல்வாழ்வு காணாது
நிமலனடி சேர்ந் தாயோ
சிலையுடைந்து சிதறுண்டது போல்
ஈராண்டு போயினும் நாமின்னும்
துயர் மத்தியிலல்லலுவா
தங்கள் பிரிவால் வாடும்; அன்பு மனைவி, மக்கள், தாய், சகோதர சகோதரிகள், மைத்துனர், மைத்துனிமார்.

46/1 பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
(C-4078)


# எம் டீ சோப்

வழங்கும் தீபாவளி அதிர்ஷ்டம்

10 நைலெக்ஸ் சேலைகளைப் பரிசாகப் பெறுங்கள்!

பங்குபற்றும் முறை

உங்கள் முழுப்பெயர், விலாசம், வயது ஆகியவற்றுடன் உங்களது அல்லது உங்கள் பெற்றோர், அல்லது பாதுகாவலரின் அடையாள அட்டை இலக்கத்தையும் ஓர் 6 x 3 அங்குல அளவு வெள்ளைக் கடதாசியின் ஒரு பக்கத்திலும் நீங்கள் சவர்க்காரம் வாங்கிய கடையின் பெயர், விலாசம், ஆகியவற்றை மறுபக்கத்திலும் எழுதி அத்துடன்

5 எம் டீ சோப் மேலுறைகளையோ அல்லது 5 எம் டீ நீல சோப் மேலுறைகளையோ அல்லது ஒரு 'எம் டீ பார் சோப்' மேலுறை அல்லது இரண்டு எம் டீ அரை பார் சோப் மேலுறைகளை சேர்த்து அனுப்ப வேண்டும்.

ஒருவர் எத்தனை விண்ணப்பங்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

✶ ஒவ்வொரு பரிசைப் பெறுபவரும் சவர்க்காரம் வாங்கிய கடைக்கு ரூபா 50/- பெறுமதியான பொருட்கள் இனும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:

எம் டீ என்ரபிறைஸ், தொழிற்பேட்டை, அச்சுவேலி.

★ 28-10-86 பிற்பகல் 5-00 மணிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.




எம் டீ சோப்

விலை ரூபா 2/-
மட்டுமே




தரமான உள்ளூர் உற்பத்திகளை ஆதரியுங்கள்!

(A-745)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

சனிக்கிழமை 16-8-86

# கிளிநொச்சி மக்கள் திரும்பிவரும்போது பீரங்கி பிரயோகம்செய்யாதீர்

## இராணுவ அதிகாரிகளுக்கு பிரஜைகள்குழு கோரிக்கை

கே, வி. கே. திருலோகமூர்த்தி]

இடம்பெயர்ந்த கிளிநொச்சி மக்கள் மீண்டும் கிளிநொச்சிக்கு திரும்புப்போது இராணுவ முகாமிலிருநது ஷெல், பீரங்கிப் பிரயோகம் மேற்கொள்ளாதிருக்க இராணுவ அதிகாரிகள் உறுதிய ளிக்க வேண்டுமெனக் கோரும் தீர்மானம் கிளிநொச்சி பிரஜைகள்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

கிளிநொச்சி ஜெயந்தி நகரிலுள்ள குருகுல மண்டபத்தில் பிரஜைகள் குழுத்தலைவரும் நீர்பாசன பொறியியலாளருமான ரி. சுப்பிரமணியம் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கிளிநொச்சி நிலைமைகள் தொடர்பாக இராணுவ இணைப்பதிகாரியை சந்திப்பமதெனவும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் மினிபஸ்களுக்கும் நெல் ஏற்றவரும் லொறிகளுக்கும் கிளிநொச்சி இராணுவ முகாமில் வழங்கப்படும் பாஸ் முறை நீக்கப்பட வேண்டும். அப்பாவிகளான பொதுமக்கள் கைதாவது நிறுத்தப்பட வேண்டுமென்று இராணுவ அதிகாரியைக் கோரும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. (க)

## யாழ். ஆணையாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், சனி

''தற்போது நிலவிவரும் சூழ்நிலையைக்கருத்திற் கொண்டு கூடுமானவரை ஆலயத்திற்குள்ளேயும் வெளியேயும் சனநெருக்கடியைத் தவிர்த்துக் கொள்வதுடன் ஆபரணங்கள் அணிந்து வருவதையும் கூடுமானவரை தவிர்த்துக் கொள்ள வேண்டும்''

நல்லூர்க்கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டி யாழ் நகரசபை ஆணையாளர் திரு சீ வீ. கே. சிவஞானம் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். [வா]

## சமாதானத்தீர்வு காணவேண்டும்

சென்னை, ஆக. 16

''இலங்கையின் இனப்பிரச்னைக்கு இந்தியப் பிரதமர் ராஜீவின் ஆலோசனைப்படி சமாதானத்தீர்வு காணவேண்டும்'' என்று தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ராமச்சந்திரன் தனது சுதந்திரதினச் செய்தியில் தெரிவித்துள்ளார் (ஊ)

## மின்மாற்றி வெடித்தது

நெல்லியடி, வெள்ளி.

நெல்லியடிப் பட்டின சபை எல்லைக்குள் இருந்த மின் மாற்றி கடந்த வியாழன் அதிகாலை பெரும் சத்தத்துடன் வெடித்ததன் விளைவாக சில இடங்கள் மின்சார வசதிகளை இழக்க நேரிட்டது.

ஏற்கனவே இரு தினங்களுக்கு முன் பருத்தித்துறை நகரசபை எல்லைக்குள் இருந்த மின்மாற்றியொன்றும் வெடித்தது குறிப்பிடத்தக்கது. [எ]

## ரயில் பயணியிடமிருந்து 300 'டைனமைட் கெற்புகள்' கண்டுபிடிப்பு

வவனியா, வெள்ளி.

வவனியா ரயில்நிலையத்தில் ரயிலேறவந்த யாழ். முஸ்லிம் நபர் ஒருவரிடமிருந்த பொதியில் 300 'டைனமைட் கெற்புகள்' இருக்கக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

நேற்று முன்தினம் யாழ். புதிய சோனகத் தெருவைச் சேர்ந்தசாஹுல்ஹமீட்நியாஸ் என்பவர் கொழும்பு செல்வதற்காக வவனியா ரயில் நிலையத்தில் நின்றார். இவர் கையில் வைத்திருந்தபொதியொன்றை ரயில் பாதுகாப்பு ஊழியர்கள் சோதனை நடத்தியபொழுது அப்பொதிக்குள் 'டைனமைட்'டுகளுக்கான கெற்பு'கள் இருக்கக் கண்டுபிடித்தனர். இவர் பின்னர் பொலிஸில் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இவருடன் ரயில் நிலையத்தில் உரையாடிக்கொண்டிருந்த நபரும் பொலிஸ் விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளார் [மா]

## மரண அறிவித்தல்

### வதிரியைச் சேர்ந்த பூரணம்

வதிரியைச்சேர்ந்த ''பல்கலைப்பண்டிதன்'' திரு மு. கிருஸ்ணபிள்ளை அவர்களின் அன்பு மனைவி பூரணம் அவர்கள் 15-8-86 வெள்ளிக்கிழமைகாலமாகிவிட்டார். அன்னாரின் பூதவுடல்சனிக்கிழமை (16-8-786 இன்றுபிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து தகனக் கிரியைக்காக ஆலங்கட்டை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: தேவாபரணம், தம்பிராஜா.
'தேவமஹால்' வதிரி. (C 4099)

### திருமதி பத்தினிப்பிள்ளை கார்த்திகேசு

கரணவாய், கரவெட்டியைச் சேர்ந்த திருமதி பத்தினிப்பிள்ளை 15-08-1986 அன்று லண்டனில் காலமானார். இவர் காலஞ் சென்ற வித்துவான் கார்த்திகேசுவின் மனைவியும், பரம்சோதி (U K), நடராசா (U K), திருமதி சிவயோகநாயகி, திருமதி கமலாதேவி, திருமதி ஞானம்பிகை (U K) ஆகியோரின் அன்புத் தயாரும், பாலசுந்தரம் [மக்கள்வங்கி], நித்தியானந்தன் [இலங்கை மின்சார சபை], சிவரத்தினம் [U K], திருமதி லீலா [U K] திருமதி பவானி [U K], ஆகியோரின் அன்பு மாமியாரும், சுந்தப்பு, வீரகத்தி ஆகியோரின் சகோதரியுமாவார். அன்னாரது தகனக் கிரியைகள் லண்டனில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: ம. நித்தியானந்தன்
[C- 4094]

### திரு. நல்லதம்பி இராசலிங்கம்

புங்குடுதீவு மேற்கு திரு நல்லதம்பி இராசலிங்கம் காலமானார். இவர் இளைப்பாறிய நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தரும் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள் பிருந்தா, அமுதா ஆகியோரின் அன்புத் தந்தையும், முல்லைத்தீவு கச்சேரியைச் சேர்ந்த நவரத்தினத்தின் சகோதரரும், காலஞ்சென்ற முருகேசு, பஞ்சலிங்கம் கந்தர்மடம் கிராமசேவை அலுவலர் மகாலிங்கம், விமானப்படைக்கந்தோர் தியாகலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவர்.

சனிக்கிழமை (16 - 8 - 86 இன்று) இறுதிச்சடங்குகள் கந்தர்மடம் 620-ம் இலக்க இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 5 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும் இவ்அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: சு. மகாலிங்கம்.
(C-4100)

### அட்வகேட் K. V. S. சண்முகநாதன்

'கந்தன் கருணை' நல்லூரைச்சேர்ந்த சட்டத்தரணி (அட்வகேட்) K V S சண்முகநாதன் 14-08-86 அன்று இறைவனடி எய்தினர். இவர் காலஞ்சென்ற பிரபல சட்டத்தரணி சின்னத்துரை தம்பதியரின் அன்பு மகனும், கனகமணியின் அன்புக்கணவரும், சிறீஸ்கந்தராசா, சிறீஸ்கந்தகுமார், இராஜகுமாரி, ரவிக்குமார் ஆகியோரின் அருமைத்தந்தையும், ஜெயலிங்கம், ஜெயந்தி ஆகியோரின் மாமனும், கதிர்காமநாதன், கதிரமலைநாதன், திருமதி மங்கையற்கரசி சின்னத்துரை, திருமதி நாகபூஷணி தியாகராசா ஆகியோரின் சகோதரரும், குழந்தைகள் லக்ஷ்மி, அர்ஜுன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் தகனக்கிரியைகள் (16-08-86 சனிக்கிழமை(இன்று) காலை 10மணிக்கு திருநெல்வேலி செம்பாடு மயானத்தில் நடைபெறும் உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

(C 4092) தகவல்: ச. சிறீஸ்கந்தகுமார்

## எழுத்துப்பரீட்சை 24ம் திகதிக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், சனி

யாழ். பல்கலைக்கழக ராமநாதன் நுண்கலைப் பிரிவில் புதிய அனுமதிக்காக இம்மாதம் 17ம் திகதி நடைபெறவிருந்த எழுத்துப் பரீட்சை இம்மாதம் 24ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாக பதில் பதிவாளர் திரு என் பாலகிருஷ்ணன் அறிவித்துள்ளார் ஏற்கனவே அறிவிக்கப் பட்டுள்ள நேரத்தின்படி ஆரம்பமாகவிருக்கும் இவ்வெழுத்துப் பரீட்சையின் போதே செய்முறை பரீட்சை பற்றிய விபரம் அறிவிக்கப் படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஆ)

## ராஜினாமா

சாவகச்சேரி, வெள்ளி

மறவன்புலோ அகதிக் குடியேற்றத்திட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த அகதிகள் நலன் புரிச்சங்கத்தின் தலைவர் திரு எஸ். செல்வராசா தமது தலைவர் பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

பல்வேறு காரணங்களினால் இச் சங்கம் பலகாலமாகச் செயல்படாமல் இருந்து வந்ததாக தெரியவருகின்றது. (சி)

## புதியகாரியதரிசி

யாழ்ப்பாணம், சனி

அண்மையில் 'யாழ் உதைபந்தாட்ட லீக்'இலிருந்து தமது காரியதரிசிப் பதவியை ராஜினாமாச் செய்துகொண்ட திரு ஈ. கே குமரையாவின் விடயத்தை நேற்று முன்தினம் நடைபெற்ற யாழ். லீக்கின் மாதாந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டபின் திரு குமரையாவின் ராஜினாமாவை சபையினர் ஏற்றுக்கொண்டனர்.

இதுவரை உதவிக் காரியதரிசியாக இருந்த திரு. எம் தேவதாஸ் தற்போது காரியதரிசியாகத் தெரிவு செய்யப் பட்டுள்ளார். [வி]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka Under number B/1003/81 Eelanadu P. O. Box 49. Telegram, Eelanadu. Telephone 22389 24126

## மரண அறிவித்தல்

### க. சின்னையா

199/4, பருத்தித்துறை வீதி நல்லூரைச் சேர்ந்த சின்னையா அவர்கள் காலமானார். காலஞ் சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும், செல்லத்துரை, பவளம், தங்கபூவதி, லீலாவதி ஆகியோரின் தந்தையுமாவார். அன்னாரின் ஈமக்கிரியை 17ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று செம்மணி மயானத்தில் தகனக் கிரியை நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத் தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: சி. செல்லத்துரை
(C- 4102)

### திருமதி சரஸ்வதி பொன்னையா

சாவகச்சேரி சரஸ்வதி பொன்னையா காலமானார். இவர், காலஞ்சென்ற கனககபை பொன்னையா [வவனியா வர்த்தகர்] வின் அன்பு மனைவியும், தனபாலசிங்கம் [ஜேர்மனி] மங்கையற்கரசி இராஜாராம் [யாழ். இந்து மகளிர் கல்லூரி] பரராஜசிங்கம் [யாழ் வீடமைப்பு திணைக்களம், அதிபர் ஸ்கந்தா அக்கடமி] குமாரசிங்கம் [பொறியியலாளர் U. N. O] சிவபூரணம் பொன்னையா [ஆசிரியை டிறிபேக் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தாயாரும், பகவதி, இராஜாராம் [பொது முகாமையாளர், யாழ். கடற்றொழிலாளர் சங்க சமாசம்] சாவித்திரிதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், நகுலினியின் அன்புப் பாட்டியும், காலஞ்சென்ற செல்லம்மா, இரத்தினசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை 17 ம் திகதி 4 மணிக்கு சாவகச்சேரியில் நடைபெறும்.

மக்களும், மருமக்களும்,
கற்குழி, தபால் கந்தோர் வீதி,
சாவகச்சேரி.
[C4097]

### வல்லிபுரம் சுப்பிரமணியம்

சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கைலாசபிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய சுப்பிரமணியம் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் அன்னப்பிள்ளை அவர்களின் அருமைப் புதல்வரும், நாகம்மாவின் அன்புக்கணவரும், சாந்தி, பத்மாவதி, செல்வரட்ணம், சற்குணம், வரதலட்சுமி, (இத்தாலி) யோகரட்ணம் (கனடா) விஜயரட்ணம் [நோர்வே] சண்முகரட்ணம் [ராதா] ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகநாதன் [இ. போ ச. காரைநகர்] நவரட்ணராஜா [உள்ளூராட்சி திணைக்களம், யாழ்ப்பாணம்] ஆகியோரின் மாமனும், கதிரவேலுவின் அன்புச் சகோதரரும், சின்னத்தம்பி, செல்லம்மா. சின்னராஜா ஆகியோரின் மைத்துனருமாவார். இறுதிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு இன்று காலை 10 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

71/1, ரெம்பிள் ரோட்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சண்முகரத்தினம்.
[C 4101]